17.01.2025 - வெள்ளிக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 72 குரோதி வருடம் தை மாதம் 04 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 17 பக்கங்கள் - 12




## சீனாவின் முன்னணி நிறுவனங்களுடன் ஜனாதிபதி பேச்சு



சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்த முதலீட்டு அமர்வில் கலந்து கொண்டு, சீனாவின் பல முன்னணி முதலீட்டு நிறுவனங்களுடன் பல விசேட கலந்துரையாடல்களை நடத்தினார்.

அதன்படி, சீனா தொலைத்தொடர்பு நிர்மாண நிறுவனம் (China Communications Construction Company Ltd), சீனா

02

## ஜனாதிபதியின் சீன விஜயத்தால் இலங்கைக்கு 3.7 பில்லியன் டொலர் நேரடி முதலீடு

### சீனாவின் முதலீடு இலங்கை மக்களுக்கு பலனளிக்கும் - அமைச்சர் பிமல்







(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாக சீனா சென்றுள்ள நிலையில், இந்தப் பயணத்தில் இலங்கைக்கு பாரிய முதலீட்டு வாய்ப்பொன்று கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த வாய்ப்பின் ஊடாக இலங்கையில் சீனா 3.7 பில்லியன் டொலர்களை நேரடியாக முதலீடு செய்ய உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கான ஒப்பந்தம் இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சீனாவின் சினோபெக் முன்னணி சர்வதேச பெற்றோலிய நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த 3.7 பில்லியன் டொலர்

02

# மன்னார் நீதி மன்றுக்கு முன் துப்பாக்கிச் சூடு; இருவர் பலி






(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நீதவான் நீதி மன்றத்துக்கு முன்பாக நேற்று (16) வியாழக்கிழமை காலை இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன்,மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

வழக்கொன்றுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்தவர்களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதன்போது படுகாயமடைந்த மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் படுகாயமடைந்த இரு ஆண்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள் (61) மற்றும் செல்வகுமார் யூட் (42) என தெரிய

02

## இலங்கைக்கு இந்திய உதவியை தொடர்ந்தும் கோருகிறார் சஜித்

### இந்திய உயர்ஸ்தானிகரிடம் நேரில் கோரிக்கை



எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு

02

## இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு; இறையாண்மைக்கு சீனா அர்ப்பணிப்பு

### சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி

இலங்கையின் சுயாதீனத் தன்மை, ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக சீனா அர்ப்பணிப்புடன் உள்ளதென சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி (Zhao Leji) தெரிவித்தார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி ஆகியோருக்கு இடையில் நேற்று (16) காலை இடம்பெற்ற

## மனித உயிர்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுங்கள்

### ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



2025 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து கடந்த 16 நாட்களில் மட்டும் 5 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்பது ஒரு தீவிரமான சூழ்நிலை என்பதை முதலில் நான் வலியுறுத்த விரும்புகிறேன் என தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மனித உயிர்களைப் பாதுகாக்க

ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 16 நாட்களில் மட்டும் 5 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர் கொல்லப்பட்டும் நான்கு பேர் காயமடைந்துமுள்ளனர்.

02

## வேலையில்லா பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்



வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் வெளிப்படுத்தும் நோக்கில் நேற்று (16) யாழ்ப்பாணத்தில் வேலையில்லா பட்டதாரிகள் வித்தியாசமான முறையில் போராட்டமொன்றை முன்னெடுத்த போது..

## சிறீதரன் எம்.பி முடிந்தால் ஸ்டாலினுடன் பேசி மீனவர் பிரச்சினையை தீர்க்கட்டும்

### யாழ். மீனவர் அமைப்பு சவால்!



முடிந்தால் கிளிநொச்சியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், தமிழக முதலமைச்சருடன் கதைப்பதற்கு நேரத்தினைப் பெற்று, அவருடன் கலந்துரையாடி எமது மீனவர்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கட்டும், அதன் பின்னர் நாங்கள் அவரது செயற்பாடுகளை வரவேற்கின்றோம் என யாழ்ப்பாண மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உபதலைவர்

02



தொடர் மழை காரணமாக மூதூர் –கட்டை பறிச்சான் இறால் பாலத்திற்கு மேலாக நேற்று (16) நீர் பாய்ந்து செல்வதையும் மாணவச் சிறார்கள் வெள்ள நீரில் சைக்கிள் ஓடுவதையும் காணலாம். (படம் - எம்.என்.எம்.புஹாரி)

## ஆசிரியர் சேவை: 2025 வருடாந்த இடமாற்றம் ஜனவரி. 27 முதல்

(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான 2025 இம் வருடத்திற்கான வருடாந்த இடமாற்றம் எதிர்வரும் 27 ம் திகதி முதல் அமுலாகுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான புதிய கல்வியாண்டு எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாவதால் அத்தினம் முதல் தேசிய, மாகாண வருடாந்த இடமாற்றங்கள் யாவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

02

## பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்தாமல் ஊழலுக்கு துணை போகிறார்கள்



பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் அதனை வெளிப்படுத்தாமல் இலஞ்ச ஊழலுக்கு துணை போகிறார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (16) ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்த அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாக கடந்தகாலத்தில் பார் லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. இலஞ்சத்தை ஒழிப்போம், பார் லைசன்ஸ்

02

# ஆளும் கட்சி எம்.பிகளுக்கு வாகனம் வழங்க பரிசீலனை

(கனுஷியா புஷ்பகுமார்)

அமைச்சர்கள் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கு வாகனங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகவும், அவர்களுக்காக டபல் கெப் வண்டிகளை இறக்குமதி செய்தா அல்லது வேறு மூலத்திலிருந்து பெற்றுக் கொள்வதா என்பது குறித்து பரிசீலித்து வருவதாகவும் அமைச்சர் ஒருவர் தெரிவித்ததாக செய்தி வெளியாகியுள்ளது.

முன்கூட்டியே வரியற்ற வாகன இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்குப் பதிலாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரச வாகனங்களை ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செலவுகளைக் குறைக்கும் நோக்கில், அவர்களுக்கு அதிசொகுசு வாகனங்கள் வழங்குவதில்லை என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்திடம் போதுமான சொகுசு வாகனங்கள் இருந்தாலும், கொள்கையின்படி அவற்றை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க முடியாது என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

சொகுசு வாகனங்கள் குறித்து தற்போது மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பின்னர் அவை ஏலம் விடப்படும் என்றும் அவர் கூறினார்.

# அனல் மின் உற்பத்தியால் வருடாந்தம் 56 பில்லியன் ரூபாய் இழப்பு

(கனுஷியா புஷ்பகுமார்)

இலங்கை மின்சார சபை எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யும் அனல் மின் உற்பத்திற்காக சில்லறை விலையில் எரிபொருளை வாங்குவதால் வருடாந்தம் 56 பில்லியன் ரூபாய் இழக்கப்படுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அனல் மின் உற்பத்திக்காக சலுகை விலையில் எரிபொருள் கிடைக்குமாக இருந்தால் மின்சாரக் கட்டணத்தை 11 வீதத்தால் குறைக்க முடியும் எனவும் குறித்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆறு மாதங்களுக்கு 28 பில்லியன் ரூபாய் எனும் அடிப்படையில் 56 பில்லியன் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆலோசனை அறிக்கையொன்றின் மூலம் மின்சார சபைக்கு அறிவித்துள்ளதாகவும் அதற்கு இது வரையில் எதுவித பதிலும் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

அனல் மின் உற்பத்திக்காக டீசல், நெப்தா மற்றும் எரிபொருள் எண்ணெய்யை பயன்படுத்துவதாக கூறிய அதிகாரி மின் உற்பத்திக்காக அதிகளவிலான டீசல் தொகையை பொதுமக்கள் எரிபொருள் நிலையங்களில் பெற்றுக் கொள்ளும் அதே விலைக்கு மின்சார சபை பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம், மின்சார உற்பத்திக்கான எரிபொருளை செலவுகளை ஈடுசெய்யும் விலையில் வழங்கினால் மின்சார சபைக்கு ஆண்டுதோறும் 56 பில்லியன் ரூபாயை சேமிக்க வாய்ப்பு உள்ளது என்றும், இது நாட்டின் மின்சார நுகர்வோருக்கு வழங்கப்படலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# பொதுமக்களின் கருத்துகளை கேட்டறிய ஐ.ம.ச நடவடிக்கை

(கனுஷியா புஷ்பகுமார்)

நாடாளுமன்றத்தினுள் எதிர்க்கட்சியின் பங்களிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்காக தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துகளை பெறுவதற்காக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச புதிய ஆராய்ச்சி பிரிவொன்றை ஆரம்பித்துள்ளார்.

இந்த ஆராய்ச்சிப் பிரிவு நேற்றுமுன்தினம்(15) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட ஊடக மற்றும் ஆராய்ச்சிப் பிரிவாக நிறுவப்பட்டுள்ளதாகவும், 0759570570 என்ற வாட்ஸ்அப் எண் மற்றும் connect@oloparliament.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இம்முறை 2025 வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது பிரதான விவாதம் மற்றும் குழு அமர்வுகளின் போது ஆக்கபூர்வமான தகவல்களைப் பெறுவதே ஆராய்ச்சி பிரிவின் முதன்மை நோக்கம் என்று அலுவலகம் கூறுகிறது.

நாடாளுமன்றத்தில் துல்லியமான தகவல்களின் அடிப்படையில் விவாதங்களுக்கு பங்களிப்பதன் முக்கியத்துவத்தையும், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் பங்கேற்பு செயல்முறையின் முக்கியத்துவத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டுகிறார்.

அதேபோல், வரவு-செலவு திட்ட விவாதத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், தொழிற்சங்கங்களின் கருத்துக்களை நாடாளுமன்ற அமர்வுகளுக்கு வழங்குவதன் மூலம், மக்கள் நலன் சார்ந்த எதிர்க்கட்சியின் பங்கை நிறைவேற்ற முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்கிறார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் தரத்தை உயர்த்துவதில் தொழிற்சங்கங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

"பட்ஜெட் விவாதத்தின் போது உங்கள் கருத்துக்களுக்கு இடம் கொடுக்க எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்ற தலைப்பில், பட்ஜெட் விவாதத்தின் போது பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக சமூக ஊடக விண்ணப்பங்களுக்கான முன்னோடித் திட்டத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் ஆரம்பித்துள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# 14 நாட்களில் 2000 டெங்கு நோயாளர்கள் பதிவு

(கனுஷியா புஷ்பகுமார்)

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் தற்போது வேகமாகப் பரவி வருகிறது.

அதன்படி, இவ்வாண்டின் கடந்த 14 நாட்களில் 2,352 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்ட அறிக்கையின்படி, கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் அந்த எண்ணிக்கை 603 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 374 நோயாளிகள், களுத்துறை மாவட்டத்தில் 58 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.மிகக் குறைந்த எண்ணிக்கையாக ஒரு நோயாளி முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகியுள்ளார்.

இதேவேளை, கடந்த 2024ஆம் ஆண்டில், 49,877 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். மேலும், டிசம்பர் மாதத்தில் மட்டும் 3,604 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### சீனாவின் முன்னணி...

பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம் (China Petrochemical Corporation-SINOPEC Group),வரையறுக்கப்பட்ட சீன மெடலஜிகல் கோபரேசன் நிறுவனம் (Metallurgical Corporation of China Ltd), ஹுவாவி (Huawei), பி.வை.டி ஓட்டோ (BYD Auto) போன்ற முன்னணி சீன நிறுவனங்களுடன் விசேட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இலங்கையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து முன்னணி சீன முதலீட்டு நிறுவனங்களுக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, அரசாங்கம் என்ற வகையில், முதலீட்டாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவை அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்

### ஜனாதிபதியின் சீன...

வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கீழ் ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 02 இலட்சம் கொள்ளளவுடைய எண்ணெய் தாங்கிகளைக் கொண்டுள்ளதுடன், அவற்றில் பெருமளவான தொகையை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவிடமிருந்து இலங்கைக்கு கிடைத்த இந்த புதிய முதலீடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதுடன் ஹம்பாந்தோட்டையின் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பலப்படுத்தும். அத்துடன் முழு இலங்கை மக்களுக்கும் இதன் பலன் மிக விரைவில் கிடைக்கப்பெறும் என ஜனாதிபதியின் சீன பயணத்தில் இணைந்துள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

சீனாவின் இந்த முதலீடுகள் ஊடாக இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தியடையும் என்பதுடன், இதன் பலன்களும் விரைவில் மக்களுக்கு கிடைக்கப்பெறும். ஜனாதிபதியின் சீன பயணத்தில் கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய முதலீட்டு திட்டமாக இதனை பார்க்கிறோம் என்றும் அவர் கூறினார்.

### மன்னார் நீதி...

வந்துள்ளது. படுகாயமடைந்த ஆணொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

உயிரிழந்த இருவரும்,காயமடைந்த ஆண் ஒருவரும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெறவிருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்தவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றதாக தெரிய வருகிறது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற இரட்டைக் கொலையை தொடர்ந்து நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் இவர்கள் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கைக்கு இந்திய...

இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

பொருளாதார, சமூக, மற்றும் அரசியல் விவகாரங்கள் பல குறித்து இதன்போது இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதோடு, அருகிலுள்ள அண்டை நாடு என்ற வகையில் பல தசாப்தங்களாக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் தனது நன்றியை இதன்போது தெரிவித்தார்.

அவ்வாறே, நமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொண்டு, வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவை தொடர்ந்து வழங்குமாறும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

### இலங்கையின் ஆள்புல...

சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கு சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் சிநேகபூர்வமாக வரவேற்பளித்தார்.

மேலும், கருத்து தெரிவித்த ஜாவோ லெஜி, இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதே சீன தேசிய காங்கிரஸின் எதிர்பார்ப்பாகும் எனவும் கூறினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டனர்.

### சிறீதரன் எம்.பி முடிந்தால்...

பிரான்சிஸ் ரட்ணகுமார் சவால் விடுத்துள்ளார்.

சம்மேளனத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று (16)நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது எமது கடற்றொழில் அமைச்சராக உள்ள சந்திரசேகரன் அவர்களுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுடன் கதைப்பதற்கு நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் அவர்கள் அதனை சரியாக பயன்படுத்தவில்லை.

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்கு இருந்தபோதே இலங்கை மீனவர்களின் பிரச்சினைகளை முதலமைச்சரிடம் எடுத்துக் கூறாமல் இங்கு வந்தபின்னர், தான் முதலமைச்சருடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கி தருமாறு கேட்டுள்ளதாகவும், மீனவர்களின் பிரச்சினைகளை கதைக்கப்போவதாகவும் கூறுகின்றார். இதெல்லாம் பகட்டுக்கும், எதிர்காலத்தில் மீனவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காகவுமே அவர் கூறுகின்றார்.

இந்தியாவில் தேர்தல் நெருங்குகின்றது. தேர்தல் காலத்தில் உங்களுக்கு நேரம் ஒதுக்கி தர மாட்டார்கள். இயலும் என்றால் நீங்கள் நேரத்தினை பெற்று நமது மீனவர்களின் பிரச்சினை குறித்து பேசித் தீருங்கள், அதற்கு பின்னர் நாங்கள் உங்களை வரவேற்கின்றோம்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் கதைப்பதற்கு, கடந்த காலத்தில் கடற்றொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடமும் கோரிக்கை முன்வைத்தோம். இதன்போது அவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கனிமொழி ஆகியோரிடம் இது குறித்து தெரிவித்தார். இருப்பினும் எமக்கான நேரம் வழங்கப்படவில்லை. அப்படி எமக்கு நேரம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் எமது பிரச்சினைகளை நேரடியாகவே எடுத்துக்கூறி இருப்போம் என்றார்.

### பார் லைசன்ஸ் ....

விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை. இவர்களும் இலஞ்சத்துக்கு துணை போனவர்களாகத்தான் பார்க்க முடியும். நாம் சவால் விடுகிறோம், முடிந்தால் பார் லைசன்ஸ் விவகாரத்தை உடன் வெளியிடுங்கள் இல்லையேல் நீங்களும் ஊழல்வாதிகள் தான் என தெரிவித்தார்.

உடுப்பிட்டி மதுபானசாலை ஏன் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என்பது தொடர்பில் வழக்கு சாட்சியமளிப்பு இடம்பெற்று வருகிறது. நாட்டிலே அதிகரித்த மதுபானசாலைகள் தொடர்பில் பல பிரச்சினை எழுந்துள்ளது. அதிகரித்த மதுபான பாவனையால் நேற்றும் பருத்தித்துறையில் வாள்வெட்டு, கத்திக் குத்து இடம்பெற்றுள்ளது. மன்னாரில் நீதிமன்றின் முன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலை நாட்டிற்கு நல்லதல்ல என குறிப்பிட்டார்.

தமிழரசு தலைமை தொடர்பிலும் புதிய அரசியல் அமைப்புத் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஶ்ரீதரன், செல்வம் அடைக்கலநாதன் பேசுவருகின்ற விடயம் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் எதிர்வரும் 18ம் திகதி மத்திய குழு கூட்டத்தில் பேசி முடிவெடுப்போம் என்றார்.

இலங்கை விடயம் சம்பந்தமாக கனிமொழியுடன் சந்திப்பை நடத்தியிருந்தோம். மத்திய அரசில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை குறைந்துள்ளது. இலங்கை தமிழர்கள் தீர்வு விடயத்தில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கு மூன்று ஆண்டுகள் தேவை என்று கூறுகிறது. அவ்வாறு தேவையில்லை. ஏற்கனவே இணங்கிக் கொண்ட விடயத்துக்கு இவ்வளவு காலம் தேவையில்லை. இது காலத்தை இழுத்தடித்து அதை இல்லாமல் செய்வதற்கான ஒரு திட்டம் என்றும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

### ஆசிரியர் சேவை:...

தேசிய பாடசாலைகளில் ஆசுக்குறைந்தது 10 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றுமொரு தேசிய பாடசாலைக்கு கல்வி அமைச்சின் தேசிய பாடசாலை இடமாற்றப் பிரிவினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண மட்டத்தில் வலயங்களுக்கிடையிலான இடமாற்றம் மாகாண அதிகாரிகளாலும் வலயங்களுக்குள்ளான உள்ளக இடமாற்றம் வலயக் கல்விப்பணிப்பாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலயத்திற்குள் ஒரு பாடசாலையில் ஆசுக்குறைந்தது 08 வருடமும் அதற்கு மேலும் கடமையாற்றியவர்களும் வெளிவலயமொன்றில் ஆசுக்குறைந்தது 06 வருடங்கள் கடமையாற்றுவோரும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய, மாகாண, வலய மட்ட இடமாற்ற சபைகளில் இடமாற்றம் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டு மேன்முறையீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு இறுதி முடிவுகள் தற்போது இடமாற்றக் கடிதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### மனித உயிர்களைப்...

இதுபோன்ற சூழ்நிலையில், நாட்டில் பொதுமக்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வது நிச்சயமற்றதாகிவிட்டது.

பொலிஸ் திணைக்களத்தின் புள்ளிவிவரங்களின்படி, வெளிநாடுகளில் 188 பேருக்கு சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன, மேலும் அவர்களில் 63 பேர் வெளிநாடுகளில் பாதாள உலக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும், கொலை, மிரட்டல் மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் குடிமக்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டுவது எந்தவொரு அரசாங்கத்தினதும் முதன்மைப் பணியாகும். இது பாதுகாப்பு, மனித உரிமைகள், சுகாதாரம், உணவு ஆகியவற்றைப் பாதுகாத்தல் என எதுவாகவும் இருக்கலாம். இந்தப் பொறுப்பை எல்லா வகையிலும் நிறைவேற்றும் அந்த நேரத்தில் அரசுக்கு தலைமை தாங்கும் அரசாங்கத்தின் பணியாகும்.

மன்னார் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக நேற்று (16) இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கமும், அனைத்து பாதுகாப்புப் படையினரும் இதுபோன்ற வருந்தத்தக்க சம்பவங்களைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலைமை மோசமடைந்தால், மக்கள் இயல்பு வாழ்க்கையை கொண்டுசெல்வதற்கும் சுதந்திரமாக செயல்படுவதற்கும் அது தடையாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

எனவே, இந்த பாதாள உலக நடவடிக்கைகளை அடக்குவதற்கும், இதனை நடத்துபவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் எதிர்க்கட்சியை வழிநடத்தும் நபர் என்ற முறையில், நானும் எனது எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுவும் அதற்குத் தேவையான ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

# தோட்டப்புற பாடசாலைகளுக்கு அறுபது ஸ்மார்ட் வகுப்புகள்

## இந்தியா 508 மில்லியன் ரூபாய் நிதி உதவி

தேர்ந்தெடுக்கப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவுவது தொடர்பாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 508 மில்லியன் ரூபாய் மானிய உதவியுடன் இலங்கையின் தோட்டப் பகுதிகளில் 'தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவுதல்' குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோருக்கு இடையில் நேற்று 16ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இந்தத் திட்டத்தின் ஊடாக நுவரெலியாவில் உள்ள 48 பாடசாலைகளிலும், இலங்கை அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்ட கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தலா 6 பாடசாலைகளிலும் இவ்வாறு 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவப்பட உள்ளன.




அதிக அரிசி ஆலைகளைக் கொண்ட

# அம்பாறை மாவட்டத்தில் அரிசிக்கு தட்டுப்பாடு

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசி விற்பனை செய்யும் கடைகளில் அரிசி விற்பனைக்கில்லையென பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் மிகக்கூடியளவு அரிசி ஆலைகள் காணப்படுகின்ற போதிலும் திடீரென அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறித்து நுகர்வோர் ஆச்சரியமடைந்துள்ளனர். மாவட்டத்திலுள்ள அரிசி ஆலைகளில் அரிசி உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளமையே இதற்கான பிரதான காரணம் என அரிசி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். கடந்த வாரம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் அம்பாறை மாவட்டத்திலுள்ள அரிசி ஆலைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது பதுக்கல் எதுவுமில்லையென உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம்: இந்தியா வரவேற்பு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இஸ்ரேல்- ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு, இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தம் மற்றும் காசாவில் போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். இது காசா மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் மனிதாபிமான உதவிக்கு வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவிக்கவும், போர்நிறுத்தம் வேண்டுமென்றும், நாங்கள் தொடர்ந்து அழைப்பு விடுத்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 04ஆம் நாள் வெள்ளிக்கிழமை

- **மேஷம்**: இன்று நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.
- **ரிஷபம்**: இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது.
- **மிதுனம்**: இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள்.
- **கடகம்**: பொறுமை மற்றும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- **சிம்மம்**: இன்று மிதமான பலன்களே கிடைக்கும்.
- **கன்னி**: இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது.
- **துலாம்**: இன்று உங்கள் முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும்.
- **விருச்சிகம்**: இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- **தனுசு**: நன்மை மற்றும் தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும்.
- **மகரம்**: இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள்.
- **கும்பம்**: உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள்.
- **மீனம்**: இன்றைய நாள் சுறுசுறுப்பாக இருக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று காலை 05:35 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.
**நட்சத்திரம்:** இன்று பிற்பகல் 02:24 வரை மகம் பின்பு பூரம்.
**யோகம்:** மரண,சித்த.
**சந்திராஷ்டமம்:** உத்திராடம், திருவோணம்.
**சூலம்:** மேற்கு.
**இராகு காலம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**குளிகை:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**எமகண்டம்:** 03:00 PM முதல் 09:00 AM வரை.

# ஜனாதிபதியின் செயலாளருக்கும் UAE தூதுவருக்கும் இடையில் சந்திப்பு



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராஜ்ஜிய தூதுவர் காலித் நாசர் அல் ஆமெரி (Khaled Nasser AlAmeri) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (16) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக இந்த சந்திப்பில் தூதுவர் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தற்பொழுதுள்ள புதிய அரசியல் போக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டிய தூதுவர் காலித் நாசர் அல் ஆமேரி , கடந்த காலங்களில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழல் இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். தற்போது ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் சுமார் 150,000 இலங்கையர்கள் பணியாற்றுவதாகவும் எதிர்காலத்தில் இந்த வேலை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்தவும் இலங்கை நிபுணர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் காலித் நாசர் அல் ஆமேரி தெரிவித்தார்.

இலங்கையுடனான வர்த்தக உறவுகளை விரிவுபடுத்த ஐக்கிய அரபு இராஜ்ஜியம் தயாராக இருப்பதாகவும், எதிர்காலத்தில் இது தொடர்பாக புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள விரும்புவதாகவும் தூதர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜிய தலைவர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான சந்திப்புக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்த தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த இது வாய்ப்பாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

## மின்சார கட்டண திருத்தம்; பொதுமக்கள் கருத்துக் கணிப்பு நிறைவு

(கனூஷியா புஷ்பகுமார்)

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பொதுமக்களின் கருத்துக் கணிப்புகளை ஆய்வு செய்து திருத்தம் செய்யப்பட வேண்டுமா அல்லது கட்டண திருத்தம் இருந்தால், அது எத்தனை வீதமாக இருக்கும் என்ற பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை இன்று (17) வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய பொது ஆலோசனை செயல்முறை கடந்த ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி ஆரம்பித்து நிறைவடைந்துள்ளது. அந்த அமர்வுகளின் போது சுமார் 400 நபர்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்ததாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் எவ்வித சவால்களும் இல்லை

(எம்.ஏ.அமீனுல்லா)

தேர்தலில் தோல்வியடைந்த கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் களமிறங்குவது தேசிய மக்கள் சக்திக்கு எந்தவிதத்திலும் சவாலாக அமையாது என தெரிவித்துள்ள அமைச்சர் கே.டி.லால்காந்த, அவர்களின் நடவடிக்கையானது பூஜ்ஜியத்துடன் பூஜ்ஜியத்தை சேர்ப்பது போன்றதாகும் எனவும் அதற்கு எந்தவொரு பெறுமதியும் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் (15) பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் கே.டி.லால்காந்த மேலும் கூறியதாவது: மக்கள் நிராகரித்த அனைத்து மதிப்பிழந்த குழுக்களும் ஒரே அளவில் போட்டியிடுவது நல்லது. இப்போது அவர்கள் சொல்ல வேண்டியதெல்லாம் ஒன்றிணைவதுதான். உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு பிரசார வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. ஏனென்றால் நாங்கள் நடத்தும் திட்டத்திற்கு மக்கள் நல்ல வரவேற்பு அளித்து வருகின்றனர்.

மேலும் சிலர் சுட்டிக்காட்டுவது போல் அரிசி பிரச்சினை தற்பொழுது இல்லை. கண்டி நகரில் நான் அவதானித்த போது, அரிசிக்கு பெரிய பிரச்சினை இல்லை என்பதை அறிந்து கொண்டேன்.சிதைவுற்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்புகிறோம். அரசு விரும்பாவிட்டாலும் சில முடிவுகளை எடுக்க வேண்டும். அதனால் சில பொருட்களின் மீதான வரியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டு ள்ளது.



இதற்கு நானும் தனிப்பட்ட முறையில் வருந்துகிறேன். ஆனால், மக்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமானால், இந்த மாதிரியான முடிவுகளை இன்று எடுக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

# மருதமுனையில் கரையொதுங்கிய டொல்பின் மீன்





கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை கடற்பிரதேசத்தில் நேற்று (16) டொல்பின் மீன் ஒன்று கரையொதுங்கியது. அதனை அப்பகுதி சிறுவர்கள் பிடித்து மீண்டும் கடலில் விடுவதை காண முடிந்தது.

சுமார் 4 முதல் 5 அடி வரையான நீளம் கொண்ட அந்த டொல்பின் மீன் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடல் கொந்தளிப்பினால் கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். ஏற்கனவே கல்முனை, பெரியநீலாவணை பாண்டிருப்பு கடற்கரை பகுதியில் கடலாமைகள், டொல்பின் மீனினம் என பலவகை கடல்வாழ் உயிரினங்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கரை ஒதுங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரிப்பு, காற்றின் திசை மாற்றம், நீரோட்டத்தில் ஏற்பட்டுள்ள திசை மாற்றம், கடல் நீரின் தன்மை வழமைக்கு மாறாக குளிர்ச்சியாக காணப்படுகின்றமை போன்ற காரணங்களால் கடல் அலைகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதினாலும் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

# சஜித்தின் தலைமைத்துவத்தின் கீழ் நாம் ஒன்றிணைவோம்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தின் கீழ் ஏனைய கட்சிகள் இணைய வேண்டும் என்பதே கட்சியின் யோசனை எனவும் இணையும் கட்சிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதும் கட்சியின் கருத்தாக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை இணைவதாக பரவி வரும் உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தொடர்பில் குறித்த சிங்கள ஊடகம் கேள்வியெழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 8ஆம் திகதி இரவு இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மேலாண்மைக் குழு கூட்டத்தில் கட்சி கட்டமைப்பை சீர்திருத்துவதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டதாகவும், கட்சிக் குழுக்கள் சீர்திருத்த செயல்முறைக்கு ஒப்புக்கொண்டதாகவும் அவர் கூறினார்.

மேலும், "சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்தின் கீழ் ஏனைய கட்சிகளை இணைத்துக் கொள்ளும் அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியையும் பரந்த கூட்டணியாக இணைத்துக் கொள்ளும் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் கலந்துரையாடி வருகிறோம்" என முஜீபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டினார்.



இந்தக் கருத்து தொடர்பில் விமர்சிக்க "ஒருவன்" செய்திச் சேவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மானை தொடர்பு கொண்ட போது அவர் பதிலளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# கருத்தறியும் சஜித்தின் முயற்சி ‘முறைமை மாற்றத்தின்’ அடிப்படை

நாடாளுமன்றத்தில் தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதற்காக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச புதிய பிரிவொன்றை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான (2025) பட்ஜெட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதும், பிரதான விவாதம் மற்றும் குழு நிலை விவாதங்களின் போது ஆக்கபூர்வமான தகவல்களைப் பெறுவதே இதன் நோக்கம் என்றும் கூறுகிறார்.

நாடாளுமன்றத்தில் துல்லியமான தகவல்களின் அடிப்படையில் விவாதங்களுக்கு பங்களிப்பதன் முக்கியத்துவத்தையும், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டுகிறார்.

அதேபோல், வரவு-செலவு திட்ட விவாதத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், தொழிற்சங்கங்களின் கருத்துக்களை நாடாளுமன்ற அமர்வுகளுக்கு வழங்குவதன் மூலம், மக்கள் நலன் சார்ந்த எதிர்க்கட்சியின் பங்கை நிறைவேற்ற முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

“பட்ஜெட் விவாதத்தின் போது உங்கள் கருத்துக்களுக்கு இடம் கொடுக்க எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். “என்ற தலைப்பில், பட்ஜெட் விவாதத்தின் போது பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக, சமூக ஊடக விண்ணப்பங்களுக்கான முன்னோடித் திட்டத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் ஆரம்பித்துள்ளதாக தெரிய வருகிறது.

நாடாளுமன்றம் (parliament) என்பது ஒரு நாட்டின் சட்டவாக்க அவை. அதாவது, சட்டங்களை இயற்றும் இடமாகும். பொதுவாக இது மக்களாட்சிக்கான அரசு ஒன்றின் சட்டவாக்க அவையைக் குறிக்கும்.

பிரித்தானிய ஆட்சி காலத்தில், உருவாக்கப்பட்ட ஆட்சி முறைமையின் எச்ச சொச்சங்களோடு இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் சபையாகவே இலங்கை நாடாளுமன்றம் திகழ்கிறது. நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை - இவை மூன்றும் அரசியலமைப்பு வரையறையின் கீழ் இலங்கையை ஆளுகின்ற கட்டமைப்புகள் ஆகும்.

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பும், எதிர்க்கட்சிகள் தரப்பும் நெறிமுறைப்படுத்தப்பட்டு, ஜனநாயக கட்டமைப்பை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் செம்மைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. 225 நாடாளுமன்ற பிரதிநிதிகளை கொண்ட இந்த சபையில், ஆளும் தரப்பும் எதிர்க்கட்சிகள் தரப்பும் ஒன்றை ஒன்று நோக்கியவாறு எதிரும் புதிருமாக ஆசன ஒழுங்குகள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இன்றும் நடைமுறையில் இருப்பது போல், எதிர்க்கட்சித் தலைவருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாக பார்க்க முடியும்.

இலங்கை நாடாளுமன்றத்தை பொறுத்த அளவில், எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய கட்சிகளின் ஏகப் பிரதிநிதியாக நியமனம் செய்யப்படுபவரே எதிர்க்கட்சித் தலைவர். எதிர்க்கட்சித் தலைவருக்கென்று பாரிய சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அமைச்சரவையின் தலைவராக இருப்பவர் பிரதமர். எதிர்க்கட்சித் தலைவர் என்பவரும் நிழல் பிரதமராகவே செயல்படுபவர் என்பது அரசியலமைப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

பிரதமருக்கு உள்ள அதே அதிகாரங்கள், எதிர்க்கட்சித் தலைவருக்கும் வகுக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயக கட்டமைப்பு ஒன்றில், எதிர்க்கட்சி ஆட்சிக்கு பக்கபலமாகவும் ஆட்சியை பொறுப்பேற்று நடத்துவதற்குரிய பலம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு அமைய, எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டு இருப்பது, இலங்கை நாடாளுமன்றத்தின், மக்கள் ஆட்சிக்கான சிறப்பம்சமாகும். ஏதோ ஒரு தவிர்க்க முடியாத காரணங்களால், ஆளும் தரப்பு ராஜினாமா செய்வார்களாக இருந்தால், ஆட்சிப் பொறுப்பை ஏற்க கூடிய வல்லமையில் எதிர்க்கட்சி இருக்க வேண்டும்.

ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எடுத்திருக்கின்ற இந்த நடவடிக்கை, ஒரு ஜனநாயக கட்டமைப்புக்கு வலுச்சேர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை. வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்படும் பொழுது, விவாதங்களுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்கின்ற பொறுப்பு எதிர்க்கட்சியிடமே இருக்கின்றது. இரண்டு கட்டங்களாக விவாதங்கள் நடத்தப்படுகின்றன. பட்ஜெட் மீதான பொது விவாதம். அதேநேரம், அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை கொண்ட குழு நிலை வாதம்.

பொதுமக்கள், தொழிற்சங்கங்கள், சமூக அந்தஸ்து உள்ளவர்களின் கருத்துக்களை பெறுகின்ற எதிர்க்கட்சித் தலைவரின் இந்த முயற்சி, கால மாற்றத்திற்கேற்ற செயல்பாடு ஆகும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற வரவு - செலவு திட்டங்களின் போது, இதுவரை மக்களின் கருத்துக்கள் நேரடியாக பெறப்பட்டதில்லை. பட்ஜெட் தயாரிப்பின் போது, சம்பிரதாயங்களுக்காக கருத்துக்களை பெறுவதாக காட்டிக் கொள்வதுதான் வழமை. இந்த நிலையில், எதிர்க்கட்சி எடுத்திருக்கின்ற முயற்சி, மக்களாட்சிக்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான பணியாகும்.

மாற்றத்திற்கான ஆணையை மக்கள் வழங்கி இருக்கிறார்கள். System change - முறைமை மாற்றம் - நாடாளுமன்றத்திலும் ஏற்பட வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு. எதிர்க்கட்சித் தலைவரின் இந்த செயல்பாடு,மாற்றம் ஒன்றிற்கான அடிப்படையாக அமைகிறது என்பதை அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டும்.



# மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது

மதுரை அலங்காநல்லூரில் 1,100 காளைகள், 900 வீரர்களுடன் ஜல்லிக்கட்டு போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது. இந்த போட்டியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, மதுரையில் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்படும்.

இதன்படி, பொங்கல் பண்டிகையையொட்டி செவ்வாய்க்கிழமை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடந்தன. அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 1,100 காளைகள் பங்கேற்றன. 900 மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதில், 19 காளைகளை அடக்கிய திருப்பரங்குன்றம் பகுதியை சேர்ந்த கார்த்தி (வயது 23) என்பவருக்கு முதல் பரிசாக துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சார்பில் கார் மற்றும் கன்றுடன் கூடிய கறவை பசு பரிசாக வழங்கப்பட்டன. இந்த போட்டியில் மலையாண்டி என்பவரது காளை முதல் பரிசுக்கு தேர்வு பெற்றது. இந்த காளை சசிகலா பெயரில் அவிழ்க்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, புதன்கிழமை மதுரை பாலமேட்டில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 1,100 காளைகள் பங்கேற்றன. 910 மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டனர். இறுதிச்சுற்று நடந்து கொண்டிருந்தபோது, மாலை 5.45 மணி அளவில் மழை குறுக்கிட்டது. இதனால் போட்டி அத்துடன் நிறுத்தப்படுகிறது என அறிவிக்கப்பட்டது.

சிறந்த காளையாக சத்திரப்பட்டியை சேர்ந்த விஜய தங்கபாண்டியன் என்பவரது காளை தேர்வு செய்யப்பட்டது. அந்த காளைக்கு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பில் டிராக்டர் பரிசாக வழங்கப்பட்டது. 14 காளைகளை பிடித்து, அதிக காளைகள் அடக்கிய நத்தம் பகுதியை சேர்ந்த பார்த்திபனுக்கு துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சார்பில் முதல் பரிசுக்கான கார் வழங்கப்பட்டது.

இதேபோன்று, மாடுபிடி வீரர்களுக்கு டி.வி., பிரிட்ஜ், பீரோ, சைக்கிள், 2 சக்கர வாகனங்கள், தங்க காசு, வெள்ளி காசு, ரொக்க பணம், குக்கர், வேட்டி, அண்டா உள்ளிட்ட பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன.

## 1,100 காளைகள், 900 வீரர்களுடன் விறுவிறுப்பு



இந்நிலையில், உலகப்புகழ் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி வியாழக்கிழமை நடைபெற்றது. போட்டியை துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வியாழக்கிழமை காலை தொடங்கி வைத்துள்ளார். தமிழக வணிகம் மற்றும் பத்திர பதிவு துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் கலெக்டர் சங்கீதா ஆகியோரும் நிகழ்ச்சியில் உடனிருந்தனர்.

காளைகளை பிடிக்க வந்துள்ள மாடுபிடி வீரர்கள் வியாழக்கிழமை காலை 7.42 மணி அளவில் உறுதிமொழி ஏற்றனர். இதனை தொடர்ந்து, ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடங்கியுள்ளன. முதலில் கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. இதன்பின்னர் போட்டிக்கான காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. ஜல்லிக்கட்டை முன்னிட்டு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.



இந்நிலையில், 1,100 காளைகள் மற்றும் 900 வீரர்களுடன் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தொடர்ந்து பல சுற்றுகளாக விறுவிறுப்பாக நடைபெற்றது. இந்த போட்டியை காண்பதற்காக உள்ளூர் மட்டுமின்றி, வெளியூர் மற்றும் வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் கூட வந்திருந்து ஜல்லிக்கட்டை ஆர்வத்துடன் கண்டு களித்தார்கள்.

முதல் சுற்று முடிவில் சூர்யா 3 காளைகளை அடக்கி முதலிடத்தை பிடித்தார். தினேஷ், கண்ணன் மற்றும் கௌதம் ஆகியோர் தலா 2 காளைகளை அடக்கி 2வது இடத்தையும் பிடித்தனர். நடிகர் சூரியின் காளையான கருப்பணை யாராலும் அடக்கப்படவில்லை. அதேபோல் அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் கொம்பன் காளையும் வாடிவாசலில் சிறப்பான வேடிக்கையை காட்டி தங்க மோதிரத்தை வென்று அசத்தியது. இதனையடுத்து தொடங்கிய 2வது சுற்றில் அபி சித்தர் 9 காளைகளையும், விஜய் 6 காளைகளையும், விக்னேஷ் மற்றும் அருன் குமார் தலா 4 காளைகளையும் அடக்கினர். இதனிடையே அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் 3வது இடத்தை பிடித்த மாடுபிடி வீரரான கார்த்தி என்பவரை மாவட்ட ஆட்சியர் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் இருந்து வெளியேற்ற உத்தரவிட்டார். ■

**மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டங்களின் நிதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும், 10 வீதமான வீடுகள் கூட குறித்த காலகட்டத்துக்குள் நிறைவு பெறவில்லை என்பது கணக்காய்வில் கண்டறிவு! – செய்தி**



# யாழில் குப்பை வண்டியுடன் பட்டதாரிகளின் விழிப்புணர்வு போராட்டம்



(பு.கஜிந்தன்)

வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினையையும் கோரிக்கையையும் மக்கள் மயப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நேற்று (16) காலை யாழ். நகர்ப்பகுதியில் முன்னெடுக் கப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையில்லாப்பட்டதாரிகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளவுள்ள இந்த விழிப்புணர்வு செயல்திட்டத்தில் துண்டுப்பிரசுரம் வழங்கல், மக்களின் கருத்துக்களை உள்வாங்கல், போன்ற நிகழ்வுகளை வேலையில்லாபட்டதாரிகளின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வு உலகத்தமிழாராட்சி மாநாட்டு படுகொலை நினைவு தூபி முன்றலில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து யாழ். நகர்ப்பகுதிக்குள் பேரணி இடம்பெற்றதுடன், பட்டம் பெற்றுவிட்டு தாங்களும் சாதாரண வேலைகளைத்தான் செய்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வீதியை கூட்டுதல், குப்பை வண்டியை தள்ளுதல் போன்ற விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

தமது பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் மக்கள் மயப்படுத்தி தமக்கான தீர்வை பெற்றுக்கொள்ள வலுச்சேர்க்கும் நோக்குடன் இச்செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.





## யாழ். வடமராட்சியில் தொலைபேசி ஊடாக 32 இலட்சம் ரூபா கொள்ளை!

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறையை சேர்ந்த பெண் ஒருவரிடம் இரண்டு இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசி இலக்கத்தில் இருந்து தொடர்பு கொண்டு தனியார் தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்தின் சீட்டிழுப்பு மூலம் பணப்பரிசு கிடைத்திருப்பதாக கூறி அவரின் வங்கி கணக்கு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் வங்கி கணக்கில் உள்ள தொலைபேசி இலக்கம் என்பவற்றை பெற்று கடவுச்சொற்களையும் அவரின் அறியாமையை பயன்படுத்தி பெற்று அதன் மூலம் வங்கி கணக்கின் ஒன்லை செயலியில் உள்நுழைந்து இரண்டு இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.

இதே முறையில் குறித்த பிரதேசத்தின் வேம்படியை சேர்ந்த முதியவர் ஒருவரிடமும் கடந்த செவ்வாய்கிழமை (14) ரூபா 29 இலட்சத்து 22 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இருவரும் வங்கியில் முறையிட்ட பொழுதும், வங்கியின் கணக்கு ஒன்றிற்கு பணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த வங்கி கணக்கின் விபரம் தமது செயலியில் காட்டப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் மருதங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முதியவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார பணிமனையில் மின் தடை: தடுப்பூசிகளுக்கு பாதிப்பு இல்லை

### சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(கி.வசந்தன்)

மின்சாரம் சிறிது நேரமே தடைப்பட்டது. இதனால் தடுப் பூசிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை என வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி நேற்று (16) தெரிவித்துள்ளார்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமையினால் அங்கு வைக்கப்பட்டிருந்த தடுப்பூசிகள் பாதிக்கப்படுமா என்கின்ற கேள்வி எழுப்பப்பட்டு ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது.


இந் நிலையில் சிறிது நேரமே மின்சாரம் தடைப்பட்டமையினால் குறித்த தடுப்பூசிகளை பாதுகாக்க கூடிய வசதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள்ளமையினால் தடுப்பூசிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை என வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

புதன்கிழமை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மின்சார நிலுவை செலுத்தப்படாமையினால் மின் துண்டிக்கப்பட்டதாகவும் நீண்ட நேரமாக மின்சாரம் இணைக்கப்படாது விடின் அங்கு குளிரூட்டியில் வைக்கப்பட வேண்டிய தடுப்பூசிகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்கின்ற சந்தேகம் நிலவியது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் செய்திகளும் வெளிவந்திருந்த நிலையில், இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார வைத் திய அதிகாரி இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

சுமார் இரண்டு மணி நேரம் மாத்திரமே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. எம்மிடம் உள்ள குளிரூட்டிகள் 24 மணித்தியாலம் மின்சாரம் தடைபட்டாலும் கூட பாதுகாக்க கூடிய வசதி கொண்டவையாக காணப்படுகின்றது. எனவே இங்குள்ள தடுப்பூசிகள் எந்த விதத்திலும் பழுதடைவதற்கு சந்தர்ப்பமில்லை என எனவே, பொதுமக்கள் எவ்வித ஐயமும் இன்றி குறித்த தடுப்பூசிகளை பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

## யாழில் பால்மா முகவர் நிலையம்



யாழ்.- சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் "ஹைலண்ட் பால்மா" முகவர் நிலையத்தை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று (16) திறந்து வைத்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி நகர வர்த்தகர்கள் ஆளுநருடன் கலந்துரையாடல்

சாவகச்சேரி நகர வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு வர்த்தக சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (15) காலை இடம்பெற்றது.

சாவகச்சேரி நகர சபையில் மக்கள் பிரதிநிதிகள் இருந்த காலத்தில் கடைகளின் உரிமங்கள் வர்த்தகர்களுக்கு மாற்றி வழங்கப்பட்டு அதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், சபையின் ஆட்சிக்காலம் முடிவடைந்த பின்னர் அந்த ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக் காட்டினர்.



இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் உடனடியாக, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் செ.பிரணவநாதனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வர்த்தகர்களின் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட விவகாரத்தை கருத்திலெடுத்து அதை உரிய முறையில சீர்செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிப்புரை வழங்கினார்.

மேலும் விசேட பண்டிகை தினங்களில் சாவகச்சேரி நகரத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் அல்லாத வேறிடங்களைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு நடைபாதை வியாபாரத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பிலும், நகர சபையால் அமைக்கப்பட்டுள்ள கடைகளை, ஏற்கனவே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்குவது தொடர்பிலும் வர்த்தக சங்கத்தினர் கோரிக்கைகள் முன்வைத்தனர். அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் மேலும் குறிப்பிட்டார்.

## மர்ம நினைவுச் சின்னத்தில் 18 புத்தர் சிலைகள் மீட்பு



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நேற்று முன்தினம் (15) கரையொதுங்கிய மர்ம நினைவுச் சின்னத்தில் இருந்த 18 புத்தர் சிலைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக கடல் நிலையில் மாற்றங்களினால் கடல் சீற் றங்கள் சூறாவளி நிலநடுக்கம் போன்றவை பல தென் கிழக்கு ஆசியா நாடுகளில் ஏற்பட்டது. இதன்போது மியன்மாரில் இருந்து இந்த நினைவாலயம் வந்து இருக்கலாம் என நம்பப்படுகிறது.

குறித்த வீட்டில் பௌத்த சமயத்தினை தாங்கிய பல மரவு அம்சங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற மருதங்கேணி பொலிஸார் அதில் காணப்பட்ட 18 புத்தர் சிலைகளையும்,செப்பேடுகளையும் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட சிலைகள் உட்பட்ட பொருட்கள் தற்பொழுது மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## இரணைமடு நீர்த்தேக்கத்துக்கு நன்றி செலுத்தும் பொங்கல்





(பு.கஜிந்தன்)

கிளிநொச்சி இரணைமடு நீர்த்தேக்கம் நீர்ப்பாசனத்துக்காக திறந்து வைக்கப்பட்டு 105 ஆண்டு நிறைவையொட்டி நன்றி செலுத்தும் பொங்கல் விழா நேற்று நடைபெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (16) காலை 9 மணியளவில் இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் தலைமையில் கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாய திணைக்களம் சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாய பீட மாணவர்கள், விவசாயிகள் என பவர் கலந்து கொண்டனர்.

சமய நிகழ்களைத் தொடர்ந்து பிரதான பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு நன்றி செலுத்தும் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நாளை மறுதினம் இரத்ததான முகாம்

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டம் ஊடாக, அண்மையில் மீள திறக்கப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலையின் இரத்த வங்கியினை சிறந்த முறையில் செயற்பட வழிவகுப்பதற்கு மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் இந்த 42 வது இரத்ததான முகாமானது நாளை மறுதினம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கியில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இரத்ததான கொடையாளர்கள் 0773241755 அல்லது 0772988917 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




# ஆழ்துளையின் அறம்

ஒரு திரைப்படம் எவ்வகையான போக்கினைக் கொண்டிருப்பினும் அது நுகர்வோனின் மனதினை வசீகரிக்காவிட்டால் அப்படைப்பு போலியானதாகிவிடும். சினிமா என்பது வெறுமையாக ஒரு விடயத்தினை சொல்லக் கூடியது அல்ல, அம்மாதிரியான படைப்புக்கள் சிறந்த சினிமாவிற்கான அடையாளமாகவும் இருக்க முடியாது. திரைப்படங்கள் எல்லாம் மனித உணர்வுகளை ஏதோ ஒரு வகையில் பேசக் கூடியவைதான். இலக்கியத்தின் கடைசிச் சந்ததியான சினிமாவானது இலக்கியம் பற்றிய வரைவிலக்கணத்தினையே தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டுள்ளது. இலக்கியம் என்பது எவ்வாறு மனித உணர்வுகளின் கதையாடல்களில் இருந்து பிரிக்க முடியாமல் உள்ளதோ அதே போல திரைப்படங்களும் மனித உணர்வுகளின் வெளிப்பாட்டில் இருந்து பிரிக்க முடியாதவையே. காட்சிப்படுத்தலின் ஊடாக மனித உணர்வினை வெளிப்படுத்துகின்ற திரைப்படங்கள் மக்கள் மனதினை அதிகம் வென்ற படைப்புக்களாகும். ஒரு உணர்வினை எழுத்து வடிவத்தில் சொல்வதனை விட காட்சிப்படுத்தலின் ஊடாக சொல்கின்ற போது அவை நுகர்வோர் மனதினில் என்றுமே நீங்காத இடத்தைப் பெறுவதனை நாம் அவதானிக்கலாம். திரைப்பட இயக்குனரும் சிறந்த சினிமா விமர்சகருமான ழான் கோலா திரைப்படங்களின் வரைவிலக்கணம் பற்றி கூறுகின்ற போது மூலக் கதைக்கும் கமராவிற்கும் இடையே, எழுத்துக்கும் படிமங்களுக்கும் இடையே, திரைக்கதைக்கும் நடிகர்களுக்கும் இடையே ஒரு படைப்பாளி இருந்து செயற்படுவதனால்தான் ஒரு திரைப்படம் உயிர் பெறுகிறது. அதற்குத்தான் நடை என்ற பெயர் என்கிறார். இதில் மிக முக்கிய விடயமாக சினிமாவினை நுகர்பவன் முன்னனி வகிப்பதினை நாம் அவதானிக்க முடியும்.

ஆழ்துளைக் கிணற்றினில் விழுந்த சிறுமியை காப்பாற்றும் நுண்ணிய திரைப்படமே கோபி நயினாரின் அறம். அண்மையில் உலகத்தின் அனைத்து ஈரங்களையும் நனைத்த சுஜித் மீட்புப் போராட்டம் அறத்தின் மீதான நிறையக் கேள்விகளை எழுப்பியது. இத்திரைப்படத்தின் பெரு வெற்றியானது ஆழ்துளைக் கிணற்றின் அபாயங்கள் பற்றி உலகிற்கு எடுத்துச் சொன்னது. ஒரு திரைப்படம் இன்றைய சூழலில் பெரும் அதிர்வினை ஏற்படுத்தியிருக்கிறது எனில் சினிமாவின் மாற்றம் எப்பொழுதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.


இன்றைய உலகின் மிக முக்கியமான பொழுதுபோக்குகளில் தனித்த அடையாளத்தினை கொண்டியங்குவது சினிமா. எல்லா வகையான சினிமாக்களும் பொழுதுபோக்கினை மாத்திரம் வைத்து இயங்குகின்றதா? அல்லது கருத்துக்களும், வாதங்களும், வாழ்வின் உணர்வுகளும் பிறக்கும் இடமாக உள்ளதா? என்பதே இக்காலகட்டத்தின் சினிமா மீதான கேள்வியாகும். இதனை கட்டுடைத்த திரைப்படங்களில் அறம் முக்கியமான படம். முன்னைய நாட்களில் சினிமாவினை ஒரு இரண்டு மணித்தியாலங்களை கடத்திச் செல்கின்ற வெறும் காட்சிப்படிமமாக பார்த்த மக்கள் இன்று சினிமாவின் நுட்பத்தினையும், அது கூறும் கதைகளையும் தங்களுடைய வாழ்வியல் கருத்து நிலைகளோடு ஒப்பிட்டு பார்க்கின்ற ஒரு முறைமை இருப்பதினை அவதானிக்கலாம். அறம் மனித வாழ்வோடு நின்று, இன்றைய சுஜித்தின் இறப்பிற்கான வலியினை நிரூபித்திருக்கிறது. இவ்வாறு எதிர்பார்ப்புகளோடு வடிவமைக்கப்படுகின்ற திரைப்படங்களை வரவேற்றும், வாழ்வியலோடு ஒத்துழைக்காத திரைப்படங்களை வெறுத்தும் மக்களின் உணர்வுகள் வெளிப்படுகின்றன. ஒரு காலத்தில் நாடக நடிகர்களுக்கு இருந்த கவனிப்பாரற்ற தன்மையினை தவிர்த்து இக்கால சினிமாவின் நாயகர்கள் மிக உயர்ந்தவர்களாகவும், கண்ணியமானவர்களாகவும் மாறியிருப்பதனை அவதானிக்க முடியும். அறத்தில் நடித்த நயன்தாராவின் பாத்திரம் அவருக்கான மரியாதையினை வேறு விதமாக மாற்றியது. இதுவே சினிமா அடைந்து கொண்ட பன்முக வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில்தான் வெறும் காட்சிப்படிமமாக இருந்த சினிமா, கருத்தியல் ரீதியாக மாற்றமுற்றது எனலாம். அறம் ஆழ்துளைக் கிணறுகளின் அபாயம் பற்றிய பாடம்.

# துயரத்தினை பாடியவன் ஈச்சரவாரியார்

ஒருவன் முத்தாரம்



ஏ.எம். சாஜித் அஹமட்



சுதந்திரம் என்பது காலத்தின் மிக முக்கிய தேவைகளில் ஒன்று, ஒவ்வொரு சமூகமும் பல்வேறு வகையான சுதந்திரத் தன்மையினை வேண்டி நிற்கின்றன. இன ரீதியாகவும், மத ரீதியாகவும், வர்ண ரீதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டு வந்த சுதந்திரத்தின் கட்டமைப்புக்கள் காலப் போக்கில் முழு வாழ்விற்குமானதும், தங்களது உரிமைகளையும், கடமைகளையும் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடாகவும் மாற்றமடைந்தன. தங்களைத் தாங்களே நிர்வகிக்க வேண்டும் என மக்கள் விரும்பினர். எவ்விதமான அதிகாரச் செயற்பாட்டிற்கும் தங்களை அர்ப்பணிக்காமல் தங்களது சுயங்களை பாதுகாக்கக் கூடிய வழிமுறைகளை ஆதரித்தனர். அதற்காக ஏராளமான போராட்டங்களும், உயிர்த்தியாகங்களும் இப்பூமியில் பெருத்துக் கிடந்தன, சுதந்திரம் பற்றிய காத்திரமான கருத்துக்கள் முழங்கப்பட்டன, பல தியாகிகள் தோற்றம் பெற்றனர். உலகமே சுதந்திரத்தின் சுவாசத்தினை சுவைக்க விரும்பியது. இதுவே காலத்தின் மிக முக்கிய தேவையாகவும் இருந்தது.

பேராசிரியர் டி.வி. ஈச்சரவாரியாரின் ஒரு தந்தையின் நினைவுக் குறிப்புகள் – ராஜன் கொலை வழக்கானது சுதந்திரமும், ஜனநாயகமும் கேள்விக்குள்ளான சாட்சிப் பிரதியாகும். இப்பிரதியினுடைய தார்மீக நியாயப்பாட்டினை முன்னுரையில் சுகுமாரன் கூறும் போது தார்மீக அடிப்படையிழந்த அரசமைப்பின் தீவினைகள் நிரபராதியான குடிமக்களின் வாழ்க்கையை எவ்வாறுசிதைக்கும்என்பதன் சரித்திரசாட்சிஈச்சரவாரியர். அவரது ஒரே மகன் ராஜன் நெருக்கடிநிலைக் காலத்தில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டான். அதற்குப் பின் அவனுக்கு என்ன நேர்ந்தது என்று தந்தைக்கோ உலகிற்கோ தெரிவிக்கப்படவில்லை. மகன் என்ன ஆனான் என்று தேடி அலைக்கழிவதே அந்த வயோதிபத் தகப்பனின் வாழ்நாள் சம்பவமாயிற்று. ஓயாத அந்த அலைச்சலின் அனுபவங்களைப் பொதுச் சமூகத்தின் கவனத்திற்கு உட்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டவை ஈச்சரவாரியாரின் நினைவுக் குறிப்புகள். ஒரு தகப்பன் தனது மகனைப் பற்றி நினைவுகூரும் போதே ஓர் அரசு தனது குடிமக்களுக்குச் செய்த சதியும் அவர்கள் மீது நடத்திய வன்முறையும் கலந்த ஓர் இருண்ட காலகட்டம் வெளிப்படுகிறது. விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவில் அதிகாரபீடம் நடத்திய அரசுப் பயங்கரவாதத்தின் சான்று இது என்கிறார். வரலாற்றின் இருண்ட பக்கமாக இருக்கும் ராஜனின் திருப்பம் பற்றி மனதின் மீது பெரும் சுமையினை ஏற்றி வைக்கிறது இவ் சரித்திரசாட்சி.

கொச்சிப் பிரதேசத்து மக்கள் மன்றத் தொகுதியின் தொண்டனாகவும், பொதுவுடமைக் கட்சியின் ஆதரவாளராகவும், திருச்சூர் செயின்ட் தோமஸ் கல்லூரி, ஏரணாகுளம் மகாராஜா கல்லூரி, சிற்றூர் அரசினர் கல்லூரி போன்றவற்றில் இந்தி மொழி ஆசிரியராகவும், தன்னுடைய பொது வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டிருந்தார் போராசிரியர். டி.வி. ஈச்சரவாரியர். நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட காலத்தில் காவல்துறையினால் சித்திரவதை செய்யப்பட்டு மரணமடைந்த தன்னுடைய மகன் ராஜனைத் தேடி பல முரண்பாடுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து, நீதியினை வழங்குமாறு கோரி பல போராட்டங்களை மேற்கொண்டு, கேரளத்தின் மனித உரிமைகளுக்கான போராட்டங்களில் மிக முக்கியமான அவதாரமாக நோக்கப்பட்டார் ஈச்சரவாரியர். மலையாள மொழியில் வெளிவந்த வாழ்க்கைச் சரிதங்களில் சிறந்த சரிதமாக கேரள சாஹித்திய அகடமி விருதினை இப்படைப்பு பெற்றுக் கொண்டது. இருட்டடிக்கப்பட்ட வரலாற்றின் மூலைகளில் எப்பொழுதும் ராஜன் வாழ்ந்து கொண்டிருப்பான் என்பதற்கான அழிக்க முடியா சாட்சியே இப்பிரதியாகும்...

# காலத்தின் பிரதி ஜோசப் ஒரு புரோஹிதன்

இலக்கியம் எப்பொழுதும் நேர்மையானதாக இருக்க வேண்டும், அதே போல இலக்கியவாதிகளும் நேர்மையானவர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும், இவ்விரண்டு விடயங்களும் ஒன்றாக செயற்படுகின்ற போதுதான் அது சமூகப்படைப்பாக உணரப்படும். பன்முக வாசிப்பினைக் கொண்ட ஒரு படைப்பாளியிடம் மட்டுமே பிரதி தருகின்ற இன்பத்தினை நுகர முடியும். பரந்துபட்ட சிந்தனைத் தளத்தின் ஊடாக எழுதப்படும் பிரதியாக்கங்கள் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வரைபடத்தினை வைத்து இயங்குவதில்லை.




கேரளத்தில் பிறந்து சிறுகதை எழுத்துலகினில் அழிக்கப்பட முடியாத இடத்தினை தனக்கான தனிப் போக்காக வகுத்துக் கொண்ட பவுல் சக்கரியா புதினங்களின் நாயகனாவார். சலாம் அமெரிக்கா, ஓரிடத்து, ஆர்க்கறியாம், ஒரு நஸ்ராணியாவும் கௌளி சாஸ்த்ரவும், பாஸ்கரபேட்லரும் என்ற ஜீவிதவும், எந்துண்டு விசேஷம் பீலாத்தோச?, கண்ணாடி காண்மோளவும், சக்கறியுடெ கதைகள், ப்ரெய்ஸ் த லோர்ட், புத்தி ஜீவிகளெக் கொண்டு எந்த பிரயோஜனம்?, இஷ்டிகயும் ஆசாரியும், இதாணென்றெ பேர், ஜோசப் ஒரு புரோஹிதன், கோவிந்தம் பஜ மூடமதே, ஒரு ஆபிரிக்கன் யாத்ரா, அல்போன் சாம்மாயுடெ மரணவும் சவசம்ஸ்காராவும், உருளிக்குன்னத்தின்றெ லுத்தீனிய, பாஸ்கரபட்டேலர் அன்ட் அதர் ஸ்டோரீஸ் போன்ற ஏராளமான படைப்புக்களின் வெளியினூடாக வாசக மனதினில் கம்பீரமாய் உட்கார்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளன் எனில் அது பால் சக்கரியாவே. மலையாள வாழ்வின் விம்பங்களை அதன் யதார்த்த விளம்பல்களோடு முன்வைத்த படைப்பாளிகளுள் சக்கரியா மிக முக்கியமானவர். மலையாள உலகின் யதார்த்த வாழ்வியலினை தன்னுடைய கதைகளில் வைக்கம் முகம்மது பஷீர் எவ்வாறு வெளிப்படுத்தினாரோ அதுவே பிற்கால எழுத்தியலின் போக்காக மலையாள வாசகர்களுக்கு அமைந்தது. இதிலிருந்து மாறுபடும் நவீன அடையாளத்தினை ட்டி.டி. ராமகிருஷ்ணன் தன்னுடைய படைப்புக்களின் மூலம் உலகிற்கு கொண்டு வந்தார். இவற்றினை தாங்கிய ஒரு மேம்பட்ட போக்கு சக்கரியாவின் கதைகளில் அமைந்திருப்பதினை நாம் நோக்க முடியும்...

கேரள சாஹித்திய அகடமி விருது, கேந்த சாஹித்திய அகடமி விருது, ஒ.வி. விஜயன் விருது என இலக்கிய உலகின் மிக முக்கியமான விருதுகளை பெற்றுக் கொண்டார் சக்கரியா. கதைகள் கொண்டியங்கும் மாய அலகினை உடைத்து கதை சொல்லல் போக்கினில் புதிய மாற்றத்தினை ஏற்படுத்திய சக்கரியாவின் கதைகள் மலையாள உலகின் காட்சிப் படிமங்களை எழுத்தியக்கத்தில் காட்டிய படைப்புக்களாகும். ஓரிடத்து படைப்பிற்காக கேரள சாகித்திய அகடமி விருது சக்கரியாவின் வசமாகியது. இலக்கியப் பரப்பினில் கதை சொல்லும் நுட்பத்தில் ஒரு உலகின் மைய அரசியலினூடே கதைக்கான களத்தினை உருவாக்கி அங்கு உணர்வுகளை விதைத்த பால் சக்கரியா கதை சொல்லலின் ஜாம்பவான்...



# ஒளிக்கடத்தல்

எல்லாக் கரைகளிலும் ஒற்றையாய் நின்று அவர்கள் பிராத்திக்கக் கூடும். ஒளியினை சுமக்கின்ற அபரிதமான வாழ்வினை அவர்கள் விரும்பியிருக்கக் கூடும். பிரகாசத்தின் விரிந்த திசைகளில் ஒட்டு மொத்தமாய் பதிந்திருந்தது அவ்வொளி. பெற்காசுகள் சிதறுகின்ற கதிர்வீச்சில் அவர்கள் அதை கண்டிருக்கக் கூடும். வழிப்போக்கனின் திசையற்ற பயணங்களிலிருந்து ஒரு நிலவினை பிடித்தெடுப்போம். புத்தன் கடந்து செல்லும் பாதைகளின் இடுக்குகளினை சுக்கு நூறாக உடைத்து பரப்பி விடுவோம். பின்னர் அவர் சுமந்திருக்கின்ற ஒளியின் தெறிப்பிலிருந்து நிலவு மங்கிப் போவதினை அவர்கள் அவதானித்திருக்கக் கூடும். தன்னைத் தூய்மைப்படுத்தும் குளிர்ந்த பானங்களிலிருந்து ரசத்தினைக் கரைத்தான் புத்தன். வழியெங்கிலும் ஊத்தப்பட்ட ரசங்களின் ஈரம், ஒளியில் பொங்கி வடிந்திருக்கலாம். உடலினை பிணைத்துக் கொள்கின்ற ஒரு ராத்திரியின் ஓசைகளில் ஒளிக்கடத்தலினை பெற முயற்சிக்கிறான். அவர்களிடமிருந்து அபகரித்துக் கொள்வதற்கான பார்வை ஒளியின் வியூகத்தில் பரவிக்கிடந்தன. சூடேற்றப்பட்ட மணலின் வெக்கையிலிருந்து ஒளி வேறுபட்டிருந்தது. ஒளிரும் கதைகள் பற்றி ஏலவே அவர்கள் கேட்டிருக்க முடியும். முன்னரான நிரூபங்களிலிருந்து அப்படியான கதைகளை அவர்கள் கேட்டிருப்பது சுமையன்றி, ஒரு சுமத்தலாக அவை மாற்றியமைத்திருக்கக் கூடும். எல்லோராலும் பற்றிக் கொள்ள முடியாத நித்திய ஒளியிலிருந்து மீண்டுமொரு முறை பிறப்பெடுக்க தொடங்கியிருந்தான் புத்த பெருமான்.

யஷோதரை கட்டிய கோட்டையிலிருந்து ஒரு இரவு தயாராகியிருந்தது. புத்தனை அரவணைத்து ஒளியினைக் கைப்பற்ற முனைந்தாள். இரவுகள் நீடிக்கும் கதைகளை அவள் அறிந்திருக்க முடியும். ஒளியினைக் கைப்பற்ற அவளிடம் ஏதுவாய் ஒன்றும் அகப்படவில்லை. இருள் படிந்திருக்கும் உலக விரிப்பின் மீது அவளின் ஏக்கம் பரப்பப்பட்டிருந்தது. விடியலின் நிபந்தனைகளை எதிர்த்தபடி அவளின் கனவுகள் நீண்டிருந்தன. எத்தனை யுகங்களாய் பற்றிக் கொள்ள முனையும் ஒளியின் ஊடாட்டம்தான் புத்தன் என்பது யாருக்குத் தெரியும்?, ஒளியினை சுமக்கும் நிபந்தனையிலிருந்து யஷோதரை மாறியிருந்தாள். ஒரு முறை அவரை இழுத்து படுக்கையில் கிடத்தி ஒளியினைச் சுமக்கின்ற பெரும் பேற்றை அவளால் உருவாக்க முடிந்தது. உருவாக்கும் செயலிலிருந்து மாற்றம் கொள்கின்ற ஒளியினையே அவரிடம் கண்டிருந்தாள். தீர்ந்துபோகக் கூடிய உருவாக்க நிலையிலிருந்து அப்படியானதொரு ஒளி தோன்றியிருக்க முடியாது. உலகின் அனைத்துப் பரப்புகளிலும் தன்னை அடையாளப்படுத்தும் ஒளியின் ஆத்மார்த்தம் பற்றி யாரால் குறிப்பிட முடியும்? ஒளிக்கு நிகரான ஒளி இங்கில்லை என்பதே வாழ்வின் எட்ட முடியாத ரகசிய பரம்பல் என்பதை அவள் அறிந்திருக்க வாய்ப்பில்லைதான். இன்னுமொரு மாசற்ற ஜீவன் அவ்வொளியினைச் சுமந்து கொண்டிருந்தது. நடுநிசி இரவில் கைவிடப்படும் ஒரு பேதையாக அவளை உணரத் தவறியிருந்தாள். அவளுக்கென்று ஒரு குழந்தை உருவாக்கப்படுவதும், அதன் வழியே அவளின் தனிமை நிர்ணயிக்கப்படுவதும் காலத்தின் விதியாகவே இருந்தது. பின்னர் ஒரு நாளில் ஒளியிளை தரிசிக்கின்ற போது, அவள் நிறைவான பல கேள்விகளை கேட்கக் கூடும்.

## கல்வியமைச்சு பணியாளர்கள்;

# மாகாண பணிப்பாளரிடம் வெளிநாட்டு லீவுக்கு அனுமதி

(முகம்மட் முக்தார்)

மத்திய கல்வி அமைச்சு அதன் அரச நிறுவன ஊழியர்களுக்கான வெளிநாட்டு லீவுக்கான அனுமதி வழங்கல் பணிகளை மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு கையளித்து இலகுபடுத்தியுள்ளது.

மத்திய கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் மத்திய நிலையங்கள் உள்ளிட்டவற்றில் கடமையாற்றும் கல்விசார், கல்விசாரா பணியாளர்களு க்கான 06 மாத காலங்கள் வரையான வெளிநாட்டு லீவு வழங்கலுக்கான அனுமதியை மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள் நேரடியாக வழங்க முடியும். ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட வெளிநாட்டு லீவு அனுமதியை மட்டும் மத்திய கல்வி அமைச்சுக்கு மாகாணகல்விப்பணிப்பாளர்கள் அனுப்பி வைக்க வேண்டுமென கல்வியமைச்சு அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் தெரிவித்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சின் கீழ் கடமையாற்றும் கல்விசார், கல்விசாரா பணியாளர்களின் நிருவாக வேலைகளை இலகுவாக்குவதற்கும் உரியகாலத்திற்கு லீவு அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காகவும் இந்த வாய்ப்பு வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. இந்நடைமுறையை மாகாண மட்டத்தில் மாகாண சபைகளில் கடமையாற்றும் கல்விசார், கல்விசாரா பணியாளர்களது குறுகிய கால வெளிநாட்டு லீவுக்கான அனுமதி வழங்கலில் பின்பற்றி வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மூலம் லீவுக்கான அனுமதியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆசிரிய தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. மாகாண சபை மட்டத்தில் குறுகிய கால வெளிநாட்டு லீவு வழங்கல் அனுமதிகள் மாதக்கணக்காக வருடக்கணக்காக இழுத்தடிக்கப்படுவதால் கல்விசாரா, கல்விசார் பணியினர் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# “தலைவர் வெற்றிக்கிண்ணம்” உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

### இறுதிப் போட்டி நாள் நாளை



(பீ.எம்.முக்தார்)

பேருவளை உதைப்பந்தாட்ட சங்கம்" தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காக" நடாத்தும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை 18 ஆம் திகதி களுத்துறை வேனன் பெர்னான்டோ விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பேருவளை கிரேட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும் தர்கா நகர் ரெட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும் இறுதிப் போட்டியில் மோத உள்ளதாக சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.சீனான் தெரிவித்தார்.

பேருவளை உதைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 20 விளையாட்டு கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றியதுடன் இறுதிப் போட்டிக்கு மேற்படி இரு அணிகளும் தெரிவாகின.

தலைவர் வெற்றி கிண்ணத்திற்காக நடாத்தப்படும் சுற்று போட்டிக்கான முழுச் செலவையும் பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ரிஸ்வான் பொறுப்பேற்றுள்ளார்.

பேருவளை மஹகொட ஐ.எல்.எம்.ஸம்ஸ்’தீன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தலைவர் கிண்ண அறிமுக நிகழ்வில் அவர் 10 இலட்சம் ரூபாய் அன்பளிப்புச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு தலைவர் எம்.எஸ்.எம் ரிஸ்வநாதியார் தலைமை வகிப்பார். இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளன தலைவர் எம்.ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும், உப தலைவரும் களுத்துறை உதைப்பந்தாட்ட சங்க தலைவருமான டொக்டர் மனில் பெர்னாண்டு, திஸ்ஸ ஜெம்ஸ் அதிபதி திஸ்ஸ ஜயவர்தன ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

விஷேட அதிதிகளாக, களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.டி சந்திரபால, உதவி பொலிஸ் அதிகாரி துமிந்த ராஜபக்ஷ மற்றும் சப்ரி ஸவாஹிர் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் பங்கு பற்றுவர். பேருவளை உதைப்பந்தாட்ட சங்க உறுப்பினர்கள், இதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 20 கழகங்களின் தலைவர்கள்,செயலாளரால் மற்றும் உறுப்பினர்கள்,பிரமுகர்கள் இரசிகர்கள் என பலரும் கலந்து கொள்வர்.இதற்கான பரவலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செயலாளர் எம்.எஸ்.எம். சீனான் குறிப்பிட்டார்.

## புத்தளத்தின் அடையாளங்களிலொன்று மர்ஹூம் மஹ்மூத் ஆலிம்

(எம்.யூ.எம். சனூன்)



1954 ஆம் ஆண்டு புத்தளத்தில் பிறந்த அப்துல்லா மஹ்மூத் ஆலிம் புத்தளத்தில் பல்துறையாளர்களின் வரிசையில் முதன்மையானவராக திகழ்ந்தார் என சமூக செயற்பாட்டாளரும், அமேசன் கெம்பஸ் மற்றும் அமேசன் கல்லூரியின் முகாமைத்துவ பணிப்பாளருமான கலாநிதி இல்ஹாம் மரைக்கார் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, புத்தளம் நகரின் பல்வேறு நிகழ்வுகளிலும் அப்துல்லா மஹ்மூத் ஆலிமின் பிரசன்னத்தை காணலாம். அந்த அளவுக்கு புத்தளம் சமூகத்தின் மத்தியில் நன்மதிப்பினையும், நம்பிக்கையினையும் கொண்ட ஒருவராக அவர் அடையாளம் காணப்பட்டு இருந்தமையே பிரதானமானதாகும். அப்துல்லா மஹ்மூத் ஆலிமின் வாழ்நாள், முழுவதுமாக ஆன்மீகத்தின் அடிப்படையில் அமைந்திருந்தமையானது சமூக ரீதியான பிரச்சினைகளின் போது நீதியான தீர்ப்பினை கூறும் ஒருவராக அவரின் செயற்பாடு காணப்பட்டதால் புத்தளம் மட்டுமல்லாமல் அதனை சூழவுள்ள கிராமங்களை சேர்ந்த மக்களும் அப்துல்லா மஹ்மூத் ஆலிம் அவர்களை நாடி வந்த சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்துள்ளதை புத்தளத்தை சார்ந்த ஒருவன் என்ற வகையில் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருத்தமாகும். குறிப்பாக அப்துல்லா மஹ்மூத் ஆலிமின் தந்தையினால் நிர்வகிக்கப்பட்ட புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரியானது இலங்கையின் அரபுக் கல்லூரிகளின் வரலாற்றில் முதன்மையானதாகும்.

# சேனவட்டை உடங்கா பாலம் உடையும் நிலையில்! அதிகாரிகளின் கவனத்திற்கு



(கே.எ.ஹமீட்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை கமநல சேவைகள் பிரதேசத்திற்கு உட்பட்ட சேனவட்டை உடங்கா பாலம் உடையும் அபாயம் காணப்படுகிறது. குறித்த பாலம் பற்றி உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர். இப் பாலத்தின் ஊடாக சேனவட்டை, நெடியாள்கண்டம்,கொக்கநாரை போன்ற வயல் பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான பாதை இதுவாகும். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் விவசாய அறுவடை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முதல் பெய்த கனமழை காரணமாக பல வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதிகாரிகள் பலர் வந்து பார்வையிட்டு சென்றுள்ளார்கள். இது வரை எந்த நஷ்ட ஈடும் அரசாங்கம் வழங்க வில்லையென விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆரையம்பதி நலன்புரி பாலர் பாடசாலையின் பிரியாவிடை விழா

(ஆரையம்பதி நிருபர்)



ஆரையம்பதி நலன்புரி சக்தி பாலர் பாடசாலை பிரியாவிடை விழா நேற்று (16) திருநீற்றுக்கேணி நலன்புரி சக்தி பாலர் பாடசாலைகேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நலன்புரி சக்தி பாலர்பாடசாலை அதிபர் திலீபன் தனுஷியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அனுரேகா விவேகானந்தன் பிரதம விருந்தினராகவும், மட்டக்களப்பு பாலர் பாடசாலை கல்வி பணியகத்தின் கள உத்தியோகத்தர் சாம்பசிவம் பரணிதரன் கௌரவ விருந்தினராகவும், புதுக்குடியிருப்பு விவேகானந்தா சமுதாய அறக்கட்டளையின் ஊடக பிரிவு உத்தியோகஸ்தர் ரமேஷ் தனுஷ்கா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சிறார்களால் நிகழ்விற்கு வருகை தந்த அதிதிகளுக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், நிகழ்வை தொடர்ந்து அதிதிகள் உரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சிறார்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் வரவேற்பு நடனம், பாடல்கள் கலை இலக்கிய நாடகம் ஆகிய நிகழ்வுகள் அரங்கேறின.

இப் பிரியாவிடை நிகழ்வில் 29 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும்,பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதில் சிறார்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் பிரதேச நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

# புனரமைக்கப்பட்ட ஹிங்குரகொட விமான ஓடுபாதை



சர்வதேச தரங்களை பூர்த்தி செய்வதற்கும், பரவலாகப் பயன்படுத்தப்படும் A320 மற்றும் போயிங் 737 விமான செயல்பாடுகளுக்கு இடமளிப்பதற்கும் ஹிங்குரகொட விமான ஓடுபாதையின் மாற்றம் தற்போது நடைபெற்று வருகிறது. முக்கிய பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு, ஓடுபாதையின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பொறுப்பு விமானப்படைக்கு ஒப்படைக்கப்பட்டது.

விமானப்படையின் வடிவமைப்புகளை மீளாய்வு செய்வதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) நியமிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் இலங்கை விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சரவைப் பத்திரம் மூலம் அத்தியாவசிய வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளை வெளியிடும்.

இந்த திட்டம் கடந்த 19, ஆகஸ்ட் 2024 ஆம் திகதியன்று விமானப்படையின் சிறப்பு திட்ட மேலாண்மை பிரிவால் அதிகாரப் பூர்வமாகத் தொடங்கப்பட்டது. இந்த இலட்சியத் திட்டம் நான்கு தனித்துவமான கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டம் பிரதான ஓடுபாதையின் கட்டுமானத்தில் கவனம் செலுத்துகிறது. இந்தக் கட்டத்தில் ஏழு நிலைகள் உள்ளன, மேலும் ஆரம்ப நிதி ஒதுக்கீடு ஒன்று மற்றும் இரண்டாம் நிலைகளை முடிக்க உதவியது, இதன் விளைவாக மொத்த 2,500 மீட்டர் ஓடுபாதையில் 850 மீட்டருக்கு நிலக்கீழ் பைண்டர் கோர்ஸ் உருவாக்கப்பட்டது.

இறுதி நிலக்கீழ் அணியும் பாதையைத் தொடர்வதற்கு முன், முடிக்கப்பட்ட 850 மீட்டர் பிரிவில் சோதனை தரையிறக்கத்தை நடத்த RDA ஆலோசகர் குழு பரிந்துரைத்தது. விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவர்களினால் இயக்கப்பட்ட Y-12 விமானம் மூலம் (ஜனவரி 13, 2025) வெற்றிகரமாக சோதனை தரையிறக்கத்தை மேற்கொண்டது, இது திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. சிறப்பு திட்ட மேலாண்மை பிரிவின்பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் சுமேத சில்வா மற்றும் ஹிங்குராக்கோட விமானப்படைத் தள கட்டளை அதிகாரி எயார் கமடோர் தினேஷ் ஜெயவீர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஓடுபாதையை மேலும் 850 மீட்டர் நீட்டிப்பதை உள்ளடக்கிய அடுத்த கட்ட கட்டுமானப் பணிகள் 2025 ஜனவரி 15 அன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதிமேதகு ஜனாதிபதியின் ஒப்புதலுடன், இந்த திட்டம் 2,500 மீட்டர் ஓடுபாதையை முழுமையாக முடிப்பதே அடுத்த இலக்காகும், இதன்மூலம் பெரிய விமானங்களின் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்கின்றது.

# கந்தளாய் குளத்தின் இரு வான்கதவுகள் திறப்பு!

(கியாஸ் ஷாபி)



கிழக்கு மாகாணத்தில், தற்போது பெய்து வருகிற கனமழை காரணமாக கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து கொண்டிருப்பதனால், நேற்று(16) குளத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இரண்டடி நீரை அவசரமாக வெளியேற்றும் முகமாக, குளத்தின் 10 வான் கதவுகளில், இரண்டு திறக்கப்பட்டுள்ளதென விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது கந்தளாய் குளத்தில் 104,375 கன அடி நீர் உள்ளதால், மேலதிகமான நீரை வெளியேற்றுவதற்காக இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டதாகவும், தொடர்ந்து மழை அதிகரிக்குமாக இருந்தால், அதிகமான வான் கதவுகளை திறக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த நிலையில் விவசாய நிலங்களை பாதுகாக்க முடியாமல் போகும். இதன் காரணமாகவே இன்று முற்பாதுகாப்பு நடவடிக்கையாக இருவான் கதவுகள் திறக்கப்பட்டதாகவும் விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

மேலதிக நீர் வெளியிடப்படுகின்றமையால் குளத்தின் கீழ்பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### கிளீன் ஸ்ரீ லங்கா

# புத்தளம்,கொழும்பு முகத்திடலை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம்

(கற்பிட்டி சியாஜ்)

அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்திற்கு வலு சேர்க்கும் முகமாக புத்தளம் கொழும்பு முகத்திடலை சுத்தப்படுத்தி அழகு படுத்துகின்ற வேலை திட்டம் நேற்று வியாழக்கிழமை (16) காலை நடைபெற்றது. புத்தளம் பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு புத்தளம் பொலிஸ் நிலையத்தின் சமூக அபிவிருத்தி பிரிவு உள்ளிட்ட முப்படை, புத்தளம் நகர சபை, புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரி சங்கம் ஆகியன ஒத்துழைப்பு வழங்கி இருந்தன. புத்தளம் கொழும்பு முகத்திடலை சுத்தப்படுத்துவதில் முப்படையினர் மற்றும் நகர சபை ஊழியர்களும் இணைந்திருந்தனர். புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம்.பைசல், புத்தளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி குணதிலக்க, புத்தளம் நகர சபையின் செயலாளர் கீதானி ப்ரீதிகா, நகர சபையின் சமூக அபிவிருத்தி அதிகாரி திருமதி ரதி, புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரி சங்க



தலைவர் வை.எம்.நிஸ்தார் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

# கிழக்கில் வெள்ள அபாயம் வான் கதவுகள் திறப்பு

(எம்.என்.எம்.புஹாரி)

தொடர்ந்து பெய்துவரும் கன மழை காரணமாக மூதூர் – கட்டை பறிச்சான் இறால் பாலத்திற்கு மேலால் நேற்று (16) காலையிலிருந்து வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தற்போது ஒரு அடிக்குமேல் வெள்ளம் பாய்ந்து செல்வதோடு மழை அதிகரிக்கின்ற போது இறால் பாலத்தின் மேலால் பாய்ந்து செல்லும் நீரின் அளவும் அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை, அம்பாறை டீ.எஸ். சேனாநாயக்க நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவு கடந்த செவ்வாய்க்கிழமை (14) திறந்து விடப்பட்ட நிலையிலும் இடைவிடாத மழை வீழ்ச்சி காரணமாக வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக தாழ்நிலங்களும் வயல் நிலங்களும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.







சம்மாந்துறை மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சவளக்கடை கமநல சேவை நிலையத்திற்குட்பட்டு செய்கை பண்ணப்பட்டுள்ள பெரும்போக வேளாண்மை செய்கையில் 2000 ஏக்கருக்கும் அதிகமாக செய்கை பண்ணப்பட்டுள்ளன. சவளக்கடை, அன்னமலை, வேப்பயடி, 5ஆம் கொலனி போன்ற பல்வேறு பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மழை வீழ்ச்சி காரணமாக சில குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது வேளாண்மை 70 நாட்கள் பயிராக காணப்படுவதனால், குடலைப்பருவத்தில் இருந்து கதிர்பருவத்திற்கு மாறும் இவ் வேளையில் இவ்வாறு குளங்களிலிருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு வாவியில்

# இராட்சத முதலைகள் நடமாட்டம் அதிகரிப்பு



(வெல்லாவெளி நிருபர்)

அண்மைய தொடர் கன மழை காரணமாக மட்டக்களப்பு வாவியில் இராட்சத முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து வருகின்றன. இந்த முதலைகள் கால்நடைகளை வேட்டையாடி வருவதாக வாவியை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் கால் நடை வளர்ப்பாளர்களும், மீனவர்களும் பொது மக்களும் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (15) கல்லடிப் பாலத்திற்கு அண்மித்த மட்டக்களப்பு அமிர்தகழி தீப்பாலத்திற்கு அருகாமையில் உள்ள வாவியில் பசுமாடு ஒன்றை முதலை பிடித்து செல்லும் காட்சி அப்பகுதி மீனவர்கள் உள்ளிட்ட பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஊடகவியலாளர் துஷ்யந்திக்கு கௌரவம்

(அபு அலா)



சிலோன் மீடியா போரத்தின் 5 வது ஆண்டு பூர்த்தி விழாவும், இலங்கை நிர்வாக சேவை ஆளுமைகள் மற்றும் சிறந்த ஊடகவியலாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் நிந்தவூர் அட்டப்பளம் தோம்புக்கண்ட சுற்றுலா விடுதியில் நடைபெற்றது.

இவ்விழாவின்போது சிலோன் மீடியா போரத்தின் மட்டு. மாவட்ட இணைப்பாளரும், ஊடகவியலாளருமான திருமதி துஷ்யந்தி சுரேஸ் (மட்டு. துஷாரா) பாராட்டப்பட்டு அவருக்கான நினைவுச் சின்னம் மற்றும் பரிசில் போன்றவற்றை பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்த திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம். அப்துல்லாஹ் வழங்கி கௌரவித்தார்.

# சாய்ந்தமருது பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் (15) புதன்கிழமை பிரதேச செயலாளர் எம்.எம் ஆசிக் ஏற்பாட்டில், பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ் உதுமாலெப்பை, ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் மற்றும் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.டி.எம். றாபி, மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர், உதவி பிரதேச செயலாளர் என்.எப்.அய்மா, உதவிப் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, திணைக்களத் தலைவர்கள், பிரதிநிதிகள், மதஸ்தாபனத்தின் பிரதிநிதிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது சாய்ந்தமருது பிரதேசத்தில் சுகாதாரம், கல்வி, காணி, விளையாட்டு, நீர்ப்பாசனம், தோணா அபிவிருத்தி, கடலரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் மீனவர்கள் எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

# ஊடகவியலாளர்களுக்கு சாய்ந்தமருதில் கதவடைப்பு!

## கல்முனை ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கு செய்தியாளர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாமை குறித்து கல்முனை ஊடகவியலாளர் ஒன்றியம் தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது. இவ்வருடத்திற்கான சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர். ஏ.ஆதம்பாவா தலைமையில் நேற்று முன்தினம்(15) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ் உதுமாலெப்பை, நிஸாம் காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் திணைக்கள தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் செய்தி சேகரிக்கவும், மக்களது பிரச்சினைகளை எடுத்துக்கூறவும் ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.அதிகாரிகள் மட்டத்தில் அவர்களால் கூறப்படும் விடயங்களை வைத்து தீர்மானங்கள் எடுக்கும் வெளிப்படைத்தன்மையற்ற வகையில் மேற்படி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இடம்பெற்றமை மிகவும் கண்டனத்திற்குரியதென மேற்படி அமையம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை நடாத்திய அரசியல்வாதிகள் தமக்கு நெருக்கமான ஊடகவியலாளர்களை அழைத்து வந்து அல்லது பிரதேச செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டு ஆதரவான செய்திகளை எழுதவைக்கப்பட்டனர்.இவ்வாறான நிலையே தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலும் இடம்பெறுகின்றதெனில் அரசாங்கம் கூறும் 'சிஸ்டம் சேஞ்சில்' இணைய சாய்ந்தமருது பிரதேச செயலகம் ஆயத்தமில்லைபோல் தெரிகிறது. என கல்முனை ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி பிரதமர், ஊடக அமைச்சர், பொதுநிருவாக அமைச்சர், அம்பாறை அரச அதிபருக்கு முறையிட உள்ளதாகவும்கல்முனை ஊடக வியலாளர் ஒன்றிய தலைவர்.ஏ.எல். எம்.முக்தார் தெரிவித்துள்ளார்.

# தொழில் நுட்ப கல்லூரியில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

(ஆரையம்பதி நிருபர்)



மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்ப கல்லூரியில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வானது (15) புதன் கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வு தொழில் நுட்ப கல்லூரியின் முதல்வர் எம் சோமசூரியம் தலைமையில் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. 2025 ஆண்டு தொழில் நுட்ப கல்லூரியின் கற்கை நெறிகளை பயில்வதற்கு புதிய மாணவர்களை உள்வாங்கும் முகமாக உயர் தொழில்நுட்பத்தினாலான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் மூலம் மாவட்ட இளைஞர் , யுவதிகளுக்கு தொழில் நுட்பத்தினை கற்பதற்கான வழிவகைகள் கல்லூரியில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தொழில நுட்ப கல்லூரியின் முதல்வர் எம் சோமசூரியம் தலைமையில் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற நிகழ்வில் ஆன்மிக அதிதிகளாக ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி, அருட்பணி பிறைணர் செலர், எம் ஐ அப்துல் கபூர்(மதனி) கலந்து சிறப்பித்தார்.

பிரதம அதிதியாக தேசபந்து செல்வராசா கல்லூரியின் உப அதிபர் ஜே.நமோதினி, தொழிற்துறை பகுதித் தலைவர் எஸ் சிவராஜ், எந்திரவியல் பகுதித் தலைவர் எஸ்உமேஸ்காந், வர்த்தகம் பகுதித் தலைவர் ஏ. சதானந்தம், பதிவாளர் ரீ.கங்கேஸ்வரன், விரிவுரையாளர்கள், மற்றும் பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பசுக்களுக்கு நன்றி செலுத்தும் பட்டிப்பொங்கல்

(வெல்லாவெளி நிருபர்)



உழவர்கள் பசுக்களுக்கு நன்றி செலுத்தும் பட்டிப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. தமிழர் பண்பாட்டோடு உழவுத் தொழிலுக்கும் ,தமது வாழ்வாதாரத்திற்கும், பெரும்பங்காற்றும் பசுக்களுக்கும் நன்றி செலுத்தும் பிரதான பண்டிகையாக பட்டிப்பொங்கல் அமைகிறது. மாடுகளுக்கும்,எருதுகளுக்கும் நீராட்டி, விபூதி அணிவித்து, பொங்கலிட்டு, தேவார பாராயணங்கள் இசைத்து வழிபடுவது வழமை, கடவுளாக போற்றப்படும் பசுக்களுக்கு நன்றி செலுத்தும் விழாவே பட்டிப்பொங்கலாகும். மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட உறுகாமத்தில் பண்ணையாளர்கள் ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் அதிதியாக கலந்து கொண்டதோடு, கட்சியின் முக்கிய உறுப்பினர்களும், பண்ணையாளர்களும் சிறப்பித்தனர்.

# சம்பூர் காட்டுப்பகுதியில் யானை சடலமாக மீட்பு

(கியாஸ் ஷாபி)



சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள கணேசபுரம் காட்டுப்பகுதியில் யானையொன்று இறந்த நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை (15) காணப்படுவதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த யானையானது காட்டுப்பகுதியில் கிடங்கொன்றில் உயிரிழந்து காணப்பட்டது. இறந்து கிடந்த யானையின் உடலில் சூட்டுக் காயங்கள் காணப்படுவதையும் அவதானிக்க முடிந்தது. குறித்த யானையானது எவ்வாறு உயிரிழந்தது என இதுவரை சரியாக உறுதிப்படுத்தப்பட வில்லை. யானையானது 14ஆம் திகதி இரவு உயிரிழந்திருக்கலாமென பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர். அதேவேளை இரண்டு தினங்களுக்கு முன்னரும் சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சந்தனவெட்டை காட்டுப்பகுதியில் யானையொன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த யானையின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஓய்வுபெறவுள்ள அதிபருக்கு சேவை நலன் பாராட்டு விழா



(திகாமடுல்ல நிருபர்)

அட்டாளைச்சேனை அல்– முனீறா பெண்கள் உயர்பாடசாலையின் அதிபராக கடமையாற்றி ஓய்வுபெறவுள்ள அதிபர் ஏ. சீ. நியாஸின் சேவை நலன் பாராட்டும், பிரியா விடை நிகழ்வும் பாடசாலையில் நடைபெற்றது.

பிரதியதிபர் எம்.ரீ.எம்.சியாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லா, பிரதி கல்விப்பணிப்பாளர் ஏ.எச்.பௌஸ், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சீனாவின் சினோபெக் நிறுவனத்துடன் இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து





# மான், மரைக் கொம்புகள், சங்குகளை விற்பதற்கு முயற்சித்த நால்வர் கைது



(ரஸீன் ரஸ்மின்)

சட்டவிரோதமான முறையில் மான், மரைக் கொம்புகள் மற்றும் தடைசெய்யப்பட்ட சங்கு வகைகள் என்பவற்றை விற்பனை செய்ய முயற்சித்த உயர்தர பாடசாலை மாணவன் உட்பட நால்வர் அலவ்வ பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமானப்படை புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, புத்தளம் – கருவலகஸ்வெவ மற்றும் குருநாகல் வனவிலங்கு உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்ட கூட்டு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் உடவலவ, கேகாலை, தெனாலேகம மற்றும் கட்டுநாயக்க ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனும் இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது, ஒன்பது அடுக்கு மான் கொம்பு, ஒரு அடுக்கு ஒற்றை மான் கொம்பு, மரைக் கொம்பு, எருமைக் கொம்பு மற்றும் விற்பனை செய்வதற்கு தடைசெய்யப்பட்ட king conch seashell சங்குகள், சந்தேக நபர்கள் பாவித்த கைத்தொலைபேசிகள், சந்தேக நபர்கள் பயணிப்பதற்கு பயன்படுத்திய சொகுசு கார் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள உத்தி யோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

# சில மருந்துகளின் விலை விரைவில் குறைக்கப்படும்



(எம்.ஏ.அமீனுல்லா )

சத்திரசிகிச்சை உபகரணங்களினதும் பல மருந்துகளினதும் விலை மிக விரைவில் குறைக்கப்படுமென சுகாதார மற்றும் ஊடகத்துறை பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

மக்கள் உணரும் வகையில் இதற்கான விலை நிர்ணய பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் சில தினங்களில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியாகுமெனவும் பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி மேலும் தெரிவித் துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் (15) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவத்த அவர், தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் விலைக் கட்டுப்பாட்டுக்குழு உள்ளது. மருந்து ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்பட்டு 10 ஆண்டுகளில் விலைக் கட்டுப்பாட்டுக் குழுக்களை நியமித்து, விலை நிர்ணய பொறிமுறையை தயாரித்திருக்க வேண்டும்.

ஆனால், அந்த பணியை அந்தந்த அரசுகள் தவறவிட்டன. இருந்த போதிலும், குழு மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை கருவிகளின் விலைகளை ஓரளவு கட்டுப்படுத்தியது. இந்த குழுவின் செயல்பாடு குறித்து, ஐந்தாண்டுகளுக்கு முன் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக, அதன் செயல்பாட்டை நிறுத்தி வைத்து, தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களின் விலையை கட்டுப்படுத்துவதில் அரசு நேரடியாக தலையிட வாய்ப்பு இல்லை. இது ஒரு துரதிர்ஷ்ட வசமான நிலை. அதையும் மீறி கடந்த காலங்க ளில் விலைக் கட்டுப்பாட்டிற்கு பல்வேறு நடவடிக் கைகளை எடுத்தோம்.

# பெண்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு



(மத்தி முகாம் ஹாரீஸ்)

நாவிதன் வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள மகளிர் சங்க அங்கத்தவர் களுக் கான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில் மத்திய முகாம் பல்தேவைக்கட்டடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னனியின் அம்பாரை மாவட்ட இணைப் பாளர் யூ.எல். ஹபீலா மற்றும் கள உத்தியோகத்தர் ஆர்.அனுஷ்கா ஆகியோரும் மத்திய முகாம் 04 கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலக மகளிர் அபிவி ருத்தி உத்தியோகத்தர் டெ.றொசாயிறோ நிகழ்வில் கலந்து கொண்டு பெண்களின் சுகாதார பாதுகாப்பு நடை முறைகள் தொடர்பாகவும், சமூகத்தில் அவர்களுக்கான அந்தஸ்து என்ன என்பது தொடர்பான தெளிவூட்டல்களை மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கிவைத்தார்.

## வைத்தியசாலைக்கு அருகாமையில்

# குப்பைகள் கொட்டுவதை நிறுத்துங்கள்

(எம்.எஸ்.எம்.மசாஹிம்)

மாத்தளை மாநகர சபையினால் வர்த்தக நிலையங்கள் மற்றும் குடியிருப்பளிலிருந்து அன்றாடம் சேகரிக்கப்படும் குப்பை கூளங்களை மாத்தளை ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் இருக்கும் இடத்தில் குவிக்கப்படுவதால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது.

இதனால் தொடர்ச்சியான துர்நாற்றம் மற்றும் ஈ மற்றும் கொசுக்கள் மாத்தளை ஆதார வைத்தியசாலைக்குள் நுழைவதால் வைத்தியசாலையின் சூழல் மற்றும் சுகாதாரத்துக்கு கேடு ஏற்படுகிறது.

எனவே, வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை மூடிவிடக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுசந்த பெர்னான்டோ தெரிவித்தார்.

மாத்தளை பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க தலைமையில் நடைபெற்ற போது, இப்பிரச்சினை மாத்தளை மாவட்டத்தில் பெரும் பிரச்சினையாக தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன தலைமையில் மாத்தளை மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற அவசர கூட்டத்தின் போது மாத்தளை ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் மாத்தளை மாநகர சபையினால் அன்றாடம் குவிக்கப்படும் குப்பை கூளங்களை கொட்டுவதை நிறுத்துவதற்கு ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டுது.

குப்பை கூளங்களை கொட்டுவதற்கு மாத்தளை மாநகரசபை எல்லைகுள் எவருக்கும் பங்கம் ஏற்படாதவாறு அவசரமாக வேறு இடத்தை தேடிக்கொள்ள இங்கு முடிவெடுக்கப்பட்டது. அதை தொடர்ந்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் மாத்தளை ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் குப்பை கொட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரட்ன, மேலதிக மாவட்ட செயலாளர் எம். ரியால்டீன், மாத்தளை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் பிரசன்ன பெர்ணார்ன்டோ, மாத்தளை மாநகர ஆணையாளர், தினுத பமபரதெனிய, மாத்தனை மாநகர பிரதான சுகாதர அதிகாரி டாக்டர் ரிஸ்வான் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

# மத்திய மாகாணத்தில் காதி நீதிபதிகளை நியமிக்குமாறு வேண்டுகோள்

(எம்.எஸ்.எம் மசாஹிம்)

மத்திய மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள காதி நீதி மன்ற நீதிபதிகளை (குவாஸி) நியமிக்க அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென காதி நீதி மன்ற வழக்குகளில் சம்பந்தப் பட்டோர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மாத்தளை, கண்டி , நாவல பிட்டி, கெலியோய , உடதலவின்ன மற்றும் அக்குறனை போன்ற பகுதிகளில் நீண்ட காலமாக காதி நீதிமன்ற நீதிபதிகள் நியமிக் கப்படாதிருப்பதாக முறைப்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதிகளில் காதி நீதிவான்களாக செயல்பட்டவர்கள் தங்களின் சேவைக்காலம் முற்றுப்பெற்று சேவையில் இருந்து விலகி கொண்டதன் காரணமாகவோ அல்லது வயது மூப்பு காரணமாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னால் வெற்றிடமாக காணப்படும் அந்த இடங்களுக்கு புதிதாக எவரும் நியமிக்கப்படாததால் தாங்கள் பெறும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக காதி நீதி மன்ற வழக்குகளுக்கு தொடர்புடை யோரும் பெற்றோர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி இடங்களுக்கு வெற்றிடமாகவுள்ள காதி நீதி மன்ற நீதிபதிகளை நியமிக்காததால் பல நூற்றுக்கணக்கான விவகாரத்து மற்றும் தாபரிப்பு வழக்குகள் நிலுவையில் தேங்கி கிடக்கின்றன. இதன் காரணமாக வழக்குகளுக்கு சம்பந்தப்பட்ட தங்களால் அடுத்து கட்ட நடவடிக்கைகளுக்கு செல்ல முடியாத இக்கட்டான சூழ்நிலைக்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவிக் கும் முறைப்பாட்டாளர்கள் உடனடியாக மத்திய மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள காதி நீதி மன்ற நீதிவான் (குவாஸி) நீதிமன்ற ங்களுக்கு தகுதியான மற்றம் பொருத்தமானவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கும்படி அரசை வேண்டிக்கொள்கின்றனர்.



# சிங்கப்பூர் ஜனாதிபதியின் டில்லி விஜயம்

சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரின் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னத்திற்கு ஜனாதிபதி மாளிகையில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் மோடி, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோர் அவரை வரவேற்றனர்.

பிரதமர் மோடியை சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசிக்கவுள்ளதுடன் முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, கடந்த 2015ஆம் ஆண்டு சிங்கப்பூரின் அப்போதைய ஜனாதிபதி டோனி டன் கிங் யாம், புதுடில்லிக்கு வருகை தந்தார். அதன் பின்னர் கடந்த 10 ஆண்டுகளில் சிங்கப்பூர் நாட்டின் ஜனாதிபதி இந்தியாவிற்கு வருவது இதுவே முதல்முறை.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம், ஏற்கனவே சிங்கப்பூர் துணை பிரதமர், நிதியமைச்சர், கல்வி அமைச்சர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிய நாடான சிங்கப்பூர் மற்றும் மிகப்பெரிய நாடான இந்தியா இடையே உறவு வலுவாக இருக்கிறது. இந்தியாவிற்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான வணிக உறவுகள் செழித்து வருகின்றன. சிங்கப்பூர் பல ஆண்டுகளாக இந்தியாவில் மிகப்பெரிய முதலீட்டாளராக உள்ளது. இந்தியா மற்றும் சிங்கப்பூர் இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன என தர்மன் சண்முகரத்னம் தெரிவித்தார்.



# கொடைக்கானலில் குறிஞ்சி மலர்கள்



கொடைக்கானலில் வருடத்திற்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் பூத்திருப்பதை கண்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாகத்துடன் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்கின்றனர்.

மலைகளின் இளவரசியான கொடைக்கானலில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீலக்குறிஞ்சி, கருங்குறிஞ்சி பூக்கள் பூக்கும். மேலும் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் சிறுகுறிஞ்சி என 20இற்கும் மேற்பட்ட குறிஞ்சி இனங்கள் உள்ளன. இந்த குறிஞ்சியின் பெயரில் கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயிலும் உள்ளது. இதில் முருக பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். இந்த குறிஞ்சி மலர்கள் கடல் மட்டத்தில் இருந்து 1200 முதல் 2500 மீட்டர் உயரத்தில் மட்டுமே வளரும் தன்மை உடையவை.

இந்நிலையில் ஆண்டுதோறும் பூக்கும் ஸ்ட்ரோ பிலாந்தஸ் கார்டி போலீயோ வகை குறிஞ்சி மலர்கள் தற்போது கொடைக்கானல் மலைப்பகுதியில் பூத்துக் குலுங்குகின்றன. டிசம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரை பூக்கும் நீலம் மற்றும் வெள்ளை வண்ணங்களிலான குறிஞ்சி மலர்கள் கண்களுக்கு விருந்து படைக்கும் வகையில் உள்ளது. இந்த அபூர்வ மலர் பூத்திருப்பதை கண்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாகத்துடன் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்கின்றனர்.

குறிஞ்சி மலர்களில் 255இற்கும் மேற்பட்ட வகைகள் உலகம் முழுவதும் உள்ளது. அதில் தற்போது வருடத்திற்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் மலைப்பகுதி முழுவதும் பூத்துக் குலுங்குகின்றன. நீல நிறத்தில் இருப்பதால் நீலக்குறிஞ்சி மலர்கள் என கருதுகின்றனர். ஆனால் நீல குறிஞ்சி மலர்கள் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும். தற்போது பூத்துள்ள மலர்கள் அந்த வகையை சேர்ந்தது இல்லை என தோட்டக்கலை துறையினர் தெரிவித்துள்ளனர்.

# இந்தியா வழியாக ஆயுதம் கடத்திய 5 பேர் கைது

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் வழியாக சட்டவிரோதமாக ஆயுதம் கடத்திய 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

வடகிழக்கு மாநிலமான மிசோரமின் மாமிட் மாவட்டத்தில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் சைத்தாஹ் எனும் கிராமத்தில் நேற்று முன்தினம் (15) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 6 ஏகே-47 ரக துப்பாக்கிகளும், அதன் 10,050 சுற்று தோட்டாக்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மியான்மார் மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரண்டு நாடுகளைச் சேர்ந்த கிளர்ச்சிப் படையினருக்கு மத்தியில் இந்தியா வழியாக சட்டவிரோதமாக ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

இதனைத் தொடர்ந்து, இந்த கடத்தலில் ஈடுபட்ட 5 பேரை மிசோரம் பொலிஸார் கைது செய்தனர். அந்த 5 பேரில் ஒருவர் மியான்மார் நாட்டைச் சேர்ந்த 'சின் நெஷனல் பிரண்ட்' எனும் கிளர்ச்சிப் படையின் முக்கியத் தலைவர் என தெரிவிக் கப்பட்டுள்ளது. மேலும், கைது செய்யப்பட்ட 6 பேரின் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு,



அந்த ஆயுதம் கடத்தும் கும்பலை மொத்தமாக அழிக்கும் முயற்சியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராட்சத பலூனில் பயணித்த குடும்பம் மாயம்

தமிழ்நாட்டின் பொள்ளாச்சியில் வானில் பறக்கவிடப்பட்ட இராட்சத வெப்பக் காற்று பலூன் ஒன்று பலூனை இயக்கிய இருவருடன் கணவன், மனைவி, இரு குழந்தைகள் உள்ளடங்கலாக மாயமாகி அயல் மாநிலமான கேரளாவிலுள்ள வயல்வெளியில் தரையிறங்கியது.

பொள்ளாச்சிக்கு அருகேயுள்ள ஆச்சிப் பட்டியில் பத்தாவது முறையாக செவ்வாய்க் கிழமையன்று (14) தமிழ்நாடு அனைத்துலக பலூன் திருவிழா நடைபெற்றது. தமிழகச் சுற்றுலாத் துறையுடன் இணைந்து தனியார் நிறுவனம் ஒன்று அந்த மூன்று நாள் திருவிழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

அமெரிக்கா, தாய்லாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், பிரேசில், வியட்னாம், பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட 12 வெப்பக் காற்று பலூன்கள் பறக்கவிடப்பட்டன. இராட்சதக் குழந்தை, சிறுத்தை, யானை, ஓநாய் போன்ற வடிவங்களில் இருந்த அந்த பலூன்கள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. சிறிய அளவிலான வெப்பக் காற்று பலூன்களும் குழந்தைகளை வெகுவாகக் கவர்ந்தன.

இந்நிலையில் யானை வடிவிலிருந்த ஒரு இராட்சத பலூன் காற்றால் திசைமாறிப் பறந்துசென்றதால் பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அந்த பலூன் புறப்பட்ட இடத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தள்ளி தரையிறங்க வேண்டிய நிலையில் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டருக்கும் அப்பால் பாலக்காட்டிலுள்ள ஒரு வயல்வெளியில் தரையிறங்கியது.

பின்னர் உள்ளூர்வாசிகளின் துணையுடன் அந்த பலூன் மீட்கப்பட்டு பொள்ளாச்சிக்கு கொண்டுசெல்லப்பட்டது.



அதில் பலூனை இயக்கிய இருவருடன் கணவன், மனைவி, இரு குழந்தைகள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. காற்றால்தான் அந்த பலூன் திசைமாறிப் பறந்ததா அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்பது குறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

# சைஃப் அலி கான் மீது கத்தி குத்து

பொலிவூட் நடிகர் சைஃப் அலி கான் (Saif Ali Khan) மும்பையில் உள்ள அவரது வீட்டில் நேற்று அதிகாலை (16) நடந்த திருட்டு முயற்சியின் போது 6 முறை கத்தியால் குத்தப்பட்டார்.

கான் தற்போது மும்பையின் லீலாவதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 54 வயதான நடிகருக்கு தற்போது அறுவை சிகிச்சை மேற்கௌள்ளப்பட்டுள்ளது.

இந் நிலையில், கானின் மனைவியும், நடிகையுமான கரீனா கபூர் கான் குழுவினர், கத்திக்குத்து தாக்குதலுக்குப் பின்னர் ஒரு அறிக்கையைப் பகிர்ந்துள்ளனர். அந்த அறிக்கையில், கரீனாவும் குழந்தைகளும் நலமாக இருப்பதாக உறுதியளிக்கப்பட்டது.



அதேநேரம், இது பொலிஸ் விவகாரம் என்பதனால் ஊடகங்கள் மற்றும் இரசிகர்கள் பொறுமையாக இருக்குமாறு அவரது குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

இதனிடையே சம்பவம் தொடர்பில் மும்பை பாந்த்ரா பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, முழுமையான விசாரணை நடைபெற்று வருகிறது.

நடிகருக்கும் ஊடுருவிய நபருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதால், கான் 6 முறை கத்தியால் குத்தப்பட்டார். இறுதியில் வீட்டில் இருந்த அனைவரும் விழித்தெழுந்ததால், கொள்ளையன் வீட்டை விட்டு தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்க ப்படுகிறது.

கான் அவரது மனைவி கரீனா கபூர் கான் அவர்களது குழந்தை களான ஜெஹ் மற்றும் தைமூர் ஆகியோர் புத்தாண்டு விடுமுறைக்காக சுவிசர்லாந்தில் இருந்து கடந்த வாரம் மும்பைக்கு திரும்பிய மையும் குறிப்பிடத்தக்கது.

# வயநாட்டு மண்சரிவு:
## காணாமல் போனோரை உயிரிழந்ததாக அறிவிக்க கேரள அரசு முடிவு

கேரள மாநிலம், வயநாட்டில் கடந்த ஆண்டு ஜுலை மாதம் ஏற்பட்ட நிலச்சரிவில் காணாமல் போனவர்களை உயிரிழந்ததாக அறிவிக்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 263 பேர் உயிரிழந்ததனர் என்றும் 35 பேரைக் காணவில்லை என்றும் அரசு ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், காணாமல் போனவர்களை உயிரிழந்துவிட்டதாக அறிவிக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் காணாமல் போனவர்களுடைய குடும்பத்தினருக்கு நிவாரண உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.





உலக வலம் WORLD NEWS

பா. கிருஷிகா

# தென்னாபிரிக்க சுரங்கத்தில் 78 சடலங்கள் மீட்பு



தென்னாபிரிக்காவின் அரசாங்கம் சட்டவிரோத சுரங்கத் தொழிலை கட்டுப்படுத்தியதற்காக விமர்சனங்களை எதிர்கொண்டு வருகின்றது, நிலத்தடியில் நூற்றுக்கணக்கான சுரங்கத் தொழிலாளர்களுக்கு உணவு மற்றும் தண்ணீரைத் துண்டித்த காரணத்தால் இந்த வாரம் குறைந்தபட்சம் 78 சடலங்கள் சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

அவர்களை மீட்க நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, மீட்புப் பணியாளர்கள் புதன்கிழமை மூன்றாவது நாளாக உயிர் பிழைத்தவர்களைத் தேடி வருகின்றனர். கைவிடப்பட்ட சுரங்கங்களில் இருந்து குறைந்தது 166 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாக காவல்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் நிலத்தடி சுரங்கத்தில் பட்டினி மற்றும் நீரிழப்பு காரணமாக இறந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் தொழிற்சங் கங்களின் கூட்டமைப்பு (SAFTU) ஜோகன்னஸ்பர்க்கிலிருந்து தென்மேற்கே 97 மைல்கள் (156 கிலோமீட்டர்) தொலைவில் அமைந்துள்ள ஸ்டில்ஃபோன்டைன் சுரங்கத்தில் நடந்த மரணங்களை "வெளிவரும் படுகொலை" என்று விவரித்தது.

சுரங்கத் தொழிலாளர்களில் பலர் மொசாம்பிக் மற்றும் பிற தென்னாபிரிக்க நாடுகளைச் சேர்ந்த ஆவணமற்ற மற்றும் முறையாக வேலைக்கு அமர்த்தப்படாத தொழிலாளர்கள், சமீபத்திய வரலாற்றில் வேண்டுமென்றே அரசின் அலட்சியபோக்கின் மிகக் கொடூரமான நடவடிக்கையினால் இறக்கவிடப்பட்டனர் என தொழிற்சங்கம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் சுரங்கத் தொழிலாளி ஒருவர் படம்பிடித்த வீடியோவில், சுரங்கத்தில் பல உடல்கள் பிளாஸ்டிக்கால் சுற்றப்பட்டிருப்பதைக் காட்டியது. அந்த வீடியோவில், சட்டையின்றி, எலும்புகள் மற்றும் விலா எலும்புகள் வெளித்தெரியும் மெலிந்த தோற்றமுடைய ஆண்களை காணமுடிந்தது.

சுரங்கத்தில் இருந்து வெளியேறிய உயிர் பிழைத்தவர்கள் உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் வாரக்கணக்கில் சகித்த பிறகு நடக்கும் பேய்களை ஒத்திருப்பதாக SAFTU தெரிவித்ததுடன் அரசாங்கம் "மனிதநேயம் இல்லாமல்" செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளது.

தென்னாபிரிக்க அரசாங்கம் இந்த நிலைமையை இவ்வளவு மோசமாக்க அனுமதித்தது மனசாட்சிக்கு விரோதமானது. இந்த சுரங்கத் தொழிலாளர்கள் விரக்தி மற்றும் கடுமையான வறுமையால் உந்தப்பட்ட சட்டவிரோத சுரங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டது உண்மைதான் என்றாலும், அவர்களின் நடவடிக்கைகள் பட்டினியால் மரண தண்டனைக்கு ஆளாவதை நியாயப்படுத்தாது என தொழிற்சங்கத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

தென்னாபிரிக்கா ஒவ்வொரு ஆண்டும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான டொலர்களை சட்டவிரோத சுரங்கத் தொழிலால் இழப்பதுடன் வர்த்தகத்தை ஒடுக்குவதாக உறுதியளித்துள்ளது. நாட்டில் சுமார் 100,000 சுரங்கத் தொழிலாளர்கள் உள்ளனர், அவர்கள் உள்நாட்டில் "ஜாமா ஜமாஸ்" என்று அழைக்கப்படுகிறார்கள். சட்டவிரோத சுரங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது தங்கத்தின் கறுப்புச் சந்தை

# ட்ரோன்களை சுட்டு வீழ்த்த ஜேர்மன் அனுமதி



ஜேர்மனியின் அமைச்சரவை, இராணுவ தளங்கள் அல்லது பிற முக்கியமான உட்கட்டமைப்புகளுக்கு அருகில் காணப்படும் சந்தேகத்திற்கிடமான ட்ரோன்களை சுட்டு வீழ்த்த இராணுவத்திற்கு அங்கீகாரம் வழங்க முடிவு செய்துள்ளது. இது தொடர்பான ஒரு வரைவு சட்டமூலத்துக்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது. இது ஜேர்மனியின் ஆயுதப் படைகள் அல்லது பொலிஸாருக்கு, முக்கியமான தளங்களில் ஆளில்லா விமானங்களைச் சுட அனுமதிக்கும்.

உக்ரேனுக்கு எதிரான ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ஆக்கிரமிப்புப் போருக்கு பிறகு, ஜேர்மன் பாதுகாப்பு பகுதிகளில் ட்ரோன்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுவதை நாங்கள் காண்கிறோம், இது காவல்துறைக்கும் அவர்களின் தற்போதைய தொழில்நுட்பத்திற்கும் அதிகரித்து வரும் சவாலாக உள்ளதாக ஜேர்மனியின் உள்துறை அமைச்சர் நான்சி ஃபேசரின் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டார்.

ராம்ஸ்டீன் விமான தளம் மற்றும் ஜெர்மனியில் உள்ள உக்ரேனிய வீரர்களுக்கான இராணுவ பயிற்சி தளங்கள் மீது சந்தேகத்திற்கிடமான ஆளில்லா விமானங்கள் காணப்பட்டதாக ஜேர்மன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரைன்மெட்டால் மற்றும் பிஏஎஸ்எஃப் போன்ற தொழில்துறை ஜாம்பவான்களிடமும் ட்ரோன்கள் காணப்படுகின்றன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். உக்ரேனை ஆதரிக்கும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக ரஷ்யா ஒரு "நிழல் போரை" ஆரம்பித்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

சர்வதேச விமானங்களை தகர்க்க, உள்கட்டமைப்பைத் தாக்க – அல்லது ஜனநாயக தேர்தல்களில் தலையிடும் முயற்சிகள் இதில் அடங்கும். ஆனால் அதனை மெஸ்கோ மறுத்துள்ளது

# போர்நிறுத்த ஒப்பந்தம் முழுமையடையவில்லை; இஸ்ரேல் பிரதமர்



ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் முழுமையடையவில்லை என்றும், இறுதி விபரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு (Benjamin Netanyahu) புதன்கிழமை தெரிவித்தார்.

மத்தியஸ்தர்களான அமெரிக்காவும் கட்டாரும் ஒப்பந்தத்தை அறிவித்த சில மணிநேரங்களுக்குப் பின்னர் நெதன்யாகுவின் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது.

இஸ்ரேலும் ஹமாஸும் காஸா பகுதியில் பேரழிவு தரும் போரை இடைநிறுத்த ஒப்புக் கொண்டதாக மத்தியஸ்தர்கள் புதன்கிழமை (15) அறிவித்தனர். இது எதிரிகளுக்கு இடையேயான கொடிய மற்றும் மிகவும் அழிவுகரமான மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது.

மூன்று கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் காஸாவில் உள்ள போராளிகள் மற்றும் இஸ்ரேலில் உள்ள நூற்றுக்கணக்கான பலஸ்தீனிய கைதிகள் மற்றும் ஹமாஸால் சிறைபிடிக்கப்பட்ட பல இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவதை உறுதியளிப்பதுடன் மேலும் காஸாவில் இடம்பெயர்ந்த நூறாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளில் எஞ்சியிருக்கும் பகுதிகளுக்கு திரும்ப செல்ல அனுமதிப்பதுடன் 15 மாத காலப் போரால் அழிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் மனிதாபிமான உதவி தேவைப்படுவதையும் இது நிவர்த்தி செய்யும் என மத்தியஸ்தர்கள் தெரிவித்தனர்.

கட்டார் பிரதமர் ஷேக் மொஹமட் பின் அப்துல்ரஹ்மான் அல் தானி, போர்நிறுத்தம் ஞாயிற்றுக்கிழமை (19) முதல் அமுலுக்கு வரும் என்றும், அதன் வெற்றி இஸ்ரேலும் ஹமாஸும் "இந்த ஒப்பந்தம் சரிந்துவிடாமல் நல்ல நம்பிக்கையுடன் செயல்பட உதவும்" என தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வொஷிங்டனில் இருந்து ஒப்பந்தத்தை பகிரங்கப்படுத்தினார். இதனிடையே, ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் முழுமையடையவில்லை என்றும், இறுதி விபரங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு புதன்கிழமை தெரிவித்தார்.

கட்டாரின் பிரதமரும், ஜனாதிபதி ஜோ பைடனும் சில மணிநேரங்களுக்கு முன்னர் அறிவித்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்கிறாரா என்பதை நெதன்யாகு வெளிப்படையாகக் கூறவில்லை.

இது குறித்த ஒரு அறிக்கையில் நெதன்யாகு, தற்போது ஒப்பந்தம் தொடர்பான பணிகள் நடந்து வருவதாகவும் இறுதி விபரங்கள் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே முறையான பதிலை வெளியிடுவேன் என தெரிவித்தார்.

இதனிடையே, பலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலை உறுதி செய்வதில் அந்த விபரங்கள் மையமாக உள்ளன என்று பேச்சுவார்த்தைகளை நன்கு அறிந்த பெயர் தெரியாத இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எந்தவொரு ஒப்பந்தமும் நெதன்யாகுவின் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேல – ஹமாஸ் போரில்

காஸாவில் பொதுமக்கள் மற்றும் போராளிகள் உட்பட 46,000 இற்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அங்குள்ள சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காஸாவில் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போர் 2023 ஒக்டோபர் 7 அன்று ஆரம்பித்தது. போராளிகள் தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்து சுமார் 1,200 பேரைக் கொன்று 250 பேரை சிறைபிடித்தனர். சிறைபிடிக்கப்பட்ட பணயக்கைதிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் உயிரிழந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நிலவில் ஆய்வுசெய்ய விண்கலத்தை அனுப்பிய 'ஸ்பேஸ்எக்ஸ்'



அமெரிக்கா, நிலவில் ஆய்வு நடத்துவதற்காக 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனம் தனது "போல்கன் 9" ரொக்கெட் மூலம் இரண்டு "லாண்டர்" (Lunur Landers) சாதனங்களை நிலாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

கடந்த 1960களில் இருந்து நிலவின் மேற்பரப்பில் 5 நாடுகள் மட்டுமே வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கியுள்ளன. முன்னாள் சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் ஆகியவைதான் அந்த நாடுகள். அதிலும், நிலவின் தென்துருவத்தில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இதற்கிடையே, நிலவில் ஆய்வு நடத்துவதற்காக 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனம் தனது "பால்கன் 9" ரொக்கெட் மூலம் 2 "லாண்டர்" சாதனங்களை நிலாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. அமெரிக்காவில் கேப் கேனவரல் நகரில் உள்ள அமெரிக்க விண்வெளி மையமான "நாஸா"வின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து புதன்கிழமை அவை செலுத்தப்பட்டன.

2 ஆண்டுகளுக்கு முன்பு, ஜப்பான் நாட்டின் "ஐஸ்பேஸ்" நிறுவனத்தின் முதலாவது "லாண்டர்" நிலவின் மேற்பரப்பில் மோதி விபத்துக்குள்ளானது. தற்போது, அந்நிறுவனம் தனது லேண்டரை மீண்டும் அனுப்பி வைத்துள்ளது. அதனுடன் "ரோவர்" சாதனமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்காக நிலவில் அழுக்குகளை சேகரிக்க "ரோவர்" சாதனம் பயன்படுத்தப்படும். எதிர்கால ஆராய்ச்சியாளர்களுக்காக நிலவில் உணவு மற்றும் நீர் ஆதாரம் இருக்கிறதா என்ற ஆய்வும் நடத்தப்படும்.

இதுபோல், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை சேர்ந்த "பயர்பிளை ஏரோஸ்பேஸ்" நிறுவனத்தின் "லாண்டர்" சாதனம் முதல் முறையாக நிலாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2 மீட்டர் உயரம் கொண்ட அந்த லாண்டர், முதலில் நிலாவை சென்றடையும். மார்ச் மாதத்தின் ஆரம்பத்திலேயே போய்ச் சேரும். ஆய்வுக்காக அழுக்குகளை சேகரிக்கும். மேற்பரப்புக்கு அடியில் நிலவும் வெப்பநிலை அளவிடப்படும். ஆனால், சற்று பெரிதான "ஐஸ்பேஸ்" நிறுவனத்தின் லாண்டர் மெதுவாக பயணம் செய்யும். மே மாதம் அல்லது ஜுன் மாதத்தில்தான் நிலவில் தரையிறங்கும் மேற்கண்ட 2 லாண்டர்களும் ஒன்றாக ரொக்கெட்டில் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், 1 மணி நேரத்துக்கு பிறகு, திட்டமிட்டபடி பிரிந்து, தனித்தனி சுற்றுவட்டப்பாதையில் பயணத்தை தொடர்ந்தன.

# 3,600 மெட்டா நிறுவன ஊழியர்கள் பணி நீக்கம்




உலகம் முழுவதும் மெட்டா நிறுவனத்தில் 72 ஆயிரம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள். அடுத்த மாதம் 10ஆம் திகக்குள் 3,600 ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை தலைமையிடமாக கொண்டு பிரபல தொழில்நுட்ப நிறுவனமாக "மெட்டா" இயங்குகிறது. பேஸ்புக், வட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் போன்ற பிரபல சமூக வலைத்தளங்களை இது நிர்வகித்து வருகிறது. உலகம் முழுவதும் மெட்டா நிறுவனத்தில் 72 ஆயிரம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்தநிலையில் மெட்டா நிறுவன ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட உள்ளதாக அதன் தலைவர் மார்க் ஜுக்கர்பேர்க் தெரிவித்துள்ளார். நிறுவனத்தை சீரமைக்கும் வகையில் 5 சதவீதம் அதாவது 3,600 ஊழியர்களை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டியல் தயாராகி வருகிறது. அடுத்த மாதம் 10ஆம் திகதிக்குள் அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பதிலாக செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை எல்லே சம்மேளனத்தின் மௌனம் கலையுமா?



இலங்கை எல்லே சம்மேளனத்தின் தலைமையில் நடைபெற்று வரும் தேசிய எல்லே சம்பியன்ஷிப் போட்டி 4 வருடங்கள் கடந்தும் மீள ஆரம்பிக்க தற்போதைய எல்லே சம்மேளன அதிகாரிகள் தவறியுள்ளனர். பொருளாதார அடிமட்டத்தில் வாழும் விளையாட்டு வீரர்களின் பிரபல விளையாட்டான எல்லே, நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் மிகவும் பிரபலமான விளையாட்டாக உள்ளது, ஆனால் எல்லே சம்மேளனத்தால் அதை ஊக்குவிக்க முடியாதது பலரை வேதனைக் கொள்ள வைத்துள்ளது.

1962 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி கொழும்பு கோட்டை டைம்ஸ் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை எல்லே சம்மேளனத்தின் முதலாவது தலைவராக ஐ. எம். வென்டர்வுன் நியமிக்கப்பட்டார். எல்லே சம்மேளனத்தின் வரலாற்றில் பலம் வாய்ந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய மக்கள் பிரதிநிதிகள் முன்னிலை வகித்த போதிலும், எல்லே விளையாட்டு மேலும் மேலும் சிதைந்து போனது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எல்லே தேசிய சம்பியன் ஷிப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், நீதிமன்ற தடை உத்தரவு நீக்கப்படும் வரை எஞ்சிய போட்டிகளை இடைநிறுத்துவதற்கு எல்லே சம்மேளன அதிகாரிகள் தீர்மானித்ததுடன், வழக்கை தாக்கல் செய்த தரப்பினர் வாபஸ் பெற்ற போதிலும், தேசிய சம்பியன்ஷிப் மீண்டும் தொடங்காதது சிக்கலாக உள்ளது.

கடந்த முறை தேசிய எல்லே சம்பியன் ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற பலம் வாய்ந்த அணியான உதம்விட்ட காமினி விளையாட்டுக் கழகம், வத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் எல்லே தேசிய சம்பியன்ஷிப் தொடரின் தீர்ப்பு தொடர்பில் எழுந்த பிரச்சினை காரணமாக எல்லே சம்மேளனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது. சில வருடங்களுக்கு முன்னர் உதம்விட்ட காமினி மற்றும் மாரவில சிங்கக் குட்டிகள் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற தேசிய சம்பியன்ஷிப் போட்டியில், தலைமை நடுவரின் முடிவை மீறி, நடுவரை தாக்கியதாக உதம்விட்ட காமினி விளையாட்டுக் கழக வீரர் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டு, போட்டி பாதியில் நிறுத்தப்பட்டது.

இதேவேளை, கடுவெல ஜெய ஸ்ரீ மற்றும் மெட கொழும்பு ஸ்ரீ விஜயா அணிகளுக்கு இடையிலான போட்டியில், வீரர் ஒருவர் மட்டையால் நடுவரின் தலையில் தாக்கிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. இந்த அனைத்து சம்பவங்களையும் எடுத்துக்கொண்டு, போட்டிகள் பாதியில் நிறுத்தப்பட்டன, ஆனால் அந்த சம்பவங்கள் அனைத்தும் கடந்த சில ஆண்டுகளில் தீர்க்கப் பட்டுள்ளன.



இலங்கை எல்லே சம்மேளனத்தில் 184 விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன், எல்லே சம்மேளனத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக பெரும்பாலான விளையாட்டுக் கழகங்கள் செயற்படாமல் உள்ளன. கடந்த எல்லே சம்மேளன அலுவலகத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஆரம்பிக்கப்பட்ட போது வாக்களிக்கும் உரிமைக்காக விண்ணப்பங்களை அனுப்பிய விளையாட்டுக் கழகங்களின் எண்ணிக்கை 25 ஆகக் குறைந்திருந்தது.

# அவுஸ்திரேலிய-இலங்கை டெஸ்ட்; பெத்தும் நிசங்க விளையாடுவது சந்தேகம்

இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பெத்தும் நிசங்க காயம் காரணமாக அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவது சந்தேகம் என தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்த பெத்தும் நிசங்க காயத்துக்குள்ளாகி தற்காலிக ஓய்வு கோரி தங்குமறைக்குத் திரும்பினார்.

அவர் மீண்டும் துடுப்பெடுத்தாடியபோது தனது எண்ணிக்கைக்கு மேலும் 16 ஓட்டங்களை சேர்த்து 66 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

ஆனால், காயத்திலிருந்து அவர் முழுமையாக குணமடையாததால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அவர் விளையாடுவது சந்தேகத்திற்குரியது. அவருக்கு பதிலாக பெரும்பாலும் இளம் துடுப்பாட்ட வீரர் நிஷான் மதுஷ்க ஆரம்ப வீரராக அணியில் இணைக்கப்படுவார் என நம்பப்படுகிறது.



கடந்த 2023 மார்ச் மாதம் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் பெற்ற நிஷான் மதுஷ்க, 10 டெஸ்ட் போட்டிகளில் ஓர் இரட்டைச் சதத்துடன் 571 ஓட்டங்களை மொத்தமாக பெற்றுள்ளார்.

# அவுஸ்திரேலிய ஓபன்

## கோகோ காப், படோசா 3வது சுற்றுக்கு முன்னேற்றம்



ஒவ்வொரு ஆண்டும் அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என 4

வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இதற்கிடையே, அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் 2வது சுற்று போட்டிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் நம்பர் 3 வீராங்கனையும், அமெரிக்காவைச் சேர்ந்தவருமான கோகோ காப், பிரிட்டனின் ஜோடி அன்னா உடன் மோதினார். இதில் கோகோ காப் 6-3, 7-5 என்ற நேர் செட்களில் வென்று 3-வது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் ஸ்பெயினின் பவுலா படோசா, அவுஸ்திரேலியாவின் டாலியா கிப்சனுடன் மோதினார். இதில் படோசா 6-1, 6-0 என்ற செட் கணக்கில் வென்று 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

# விராட் கோலியின் சாதனை முறியடிப்பு உலக அளவில் முதலிடம்

விஜய் ஹசாரே கிண்ணத்தில் கர்நாடகா அணியின் 24 வயதான நட்சத்திர வீரர் டேவுதட் படிக்கல், அரை இறுதி ஆட்டத்தில் 113 பந்துகளை எதிர் கொண்டு 86 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 8 பவுண்டர்களும் ஒரு சிக்சரும் அடங்கும்.இதன் மூலம் லிஸ்ட் ஏ கிரிக்கெட் போட்டியில் உலக அளவில் அதிக சராசரி வைத்திருக்கும் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இந்த போட்டியில் முதலில் ஹரியானா அணி செய்து 9 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்கள் எடுத்தது. இதை அடுத்து 238 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கர்நாடகா அணி முதல் ஓவரிலே தங்களுடைய கப்டன் மாயங் அகர்வாலை இழந்தது.



இந்த நிலையில் மூன்றாவது விக்கெட்டிற்கு ஜோடி சேர்ந்த 24 வயது வீரரான முன்னாள் ஆர் சி பி வீரர் தேவுதட் படிக்கல், ரவிச்சந்திரன் சமரன் உடன் ஜோடி சேர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்கு 128 ஓட்டங்கள் சேர்த்தது. இதில் அபாரமாக விளையாடிய படிக்கல் 113 பந்துகளை எதிர் கொண்டு 86 ஓட்டங்கள் சேர்த்தார். இதில் 8 பவுண்டர்களும் ஒரு சிக்சரும் அடங்கும்.

இதன் மூலம் லிஸ்ட் ஏ கிரிக்கெட் போட்டியில் உலக அளவில் அதிக சராசரி வைத்திருக்கும் வீரர் என்ற சாதனையை படிக்கல் படைத்திருக்கிறார். 2000 ஓட்டங்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் படிக்கல்தான் தற்போது அதிக சராசரி வைத்திருக்கிறார். 31 போட்டியில் விளையாடியுள்ள படிக்கல் சராசரியாக 82.52 அளவில் பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு இந்திய அணியின் ருதுராஜ் 58 என்ற சராசரியும்,அவுஸ்திரேலிய வீரர் மைக்கேல் பேவன் 57 என்ற சராசரியும், இங்கிலாந்து வீரர் சாம் ஹேறண் 57 என்ற சராசரியும், விராட் கோலி 57 என்ற சராசரியும் வைத்திருந்தார்கள். படிக்கல் நடந்து முடிந்த பார்டர் கவாஸ்கர் தொடரில் இந்திய அணிக்காக விளை யாடினார்.



சிட்னி டெஸ்ட் போட்டிக்கு பிறகு தாயகம் திரும்பி அவர் கால் இறுதியில் 99 பந்துகளில் 102 விளாசி பரோடா அணிக்கு எதிரான ஆட்டத்தில் கர்நாடகாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். டேவுதட் படிக்கல் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் அபாரமாக விளையாடி வரும் நிலையில், அவருக்கு சம்பியன்ஸ் கிண்ணம் தொடரில் இடம் தர வேண்டும் என்று ரசிகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# இந்திய-அயர்லாந்து ஒருநாள் தொடர்; இந்திய மகளிர் அணி இமாலய வெற்றி



அயர்லாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய பெண்கள் அணி 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது. தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

இந்தியா வந்த அயர்லாந்து பெண்கள் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. முதல் இரு போட்டியில் இந்தியா வென்றது. மூன்றாவது, கடைசி போட்டி நேற்று முன்தினம் ராஜ்கோட்டில் நடந்தது. நாணயசுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

## இரண்டு சதம்

இந்திய அணிக்கு கேப்டன் ஸ்மிருதி மந்தனா, பிரதிகா அசத்தல் ஆரம்பம் கொடுத்தனர். மந்தனா 70 பந்தில் சதம் அடித்தார். முதல் விக்கெட்டுக்கு 233 ஓட்டங்கள் சேர்த்த போது, மந்தனா (135 , 80 பந்து, 7ஒ6, 12ஒ4) வெளியேறினார். சிறப்பான துடுப்பாட்டத்தை தொடர்ந்த பிரதிகா, ஒருநாள் அரங்கில் தனது முதல் சதம் கடந்தார்.

ரிச்சா கோஷ் 59, தேஜல் 28 ஓட்டங்கள் எடுத்தனர். இந்திய பெண்கள் அணி ஒருநாள் அரங்கில் அதிகபட்சமாக 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 435 ஓட்டங்கள் குவித்தது. ஜெமிமா (4), தீப்தி (11) களத்தில் இருந்தனர்.

## தீப்தி அபாரம்

கடின இலக்கைத் துரத்திய அயர்லாந்து அணியின் ஆர்லா (36), சாரா (41) போராடினர். லியா 15 வெளியேறினார். மற்றவர்கள் ஒற்றை இலக்கத்தில் திரும்பினர். 31.4 ஓவரில் 131 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோற்றது. இந்தியா சார்பில் தீப்தி 3, தனுஜா 2 விக்கெட் வீழ்த்தினர்.

ஒருநாள் அரங்கில் அதிக சதம் அடித்த இந்திய வீராங்கனை வரிசையில் முதலிடத்தில் தொடர்கிறார் மந்தனா (10). மிதாலி (7), ஹர்மன்பிரீத் கவுர் (6) அடுத்து உள்ளனர்.

சர்வதேச அரங்கில் மெக் லானிங் (15, ஆஸி.), சுஜீக்கு (13, நியூசி.) அடுத்து உள்ளார் மந்தனா.

இந்திய ஒருநாள் அரங்கில் அதிவேக சதம் அடித்த வீராங்கனை ஆனார் மந்தனா. நேற்று முன்தினம் இவர் 70 பந்தில் சதம் கடந்தார். இதற்கு முன் ஹர்மன்பிரீத் கவுர் 87 பந்தில் (2024, தெ.ஆப்.) சதம் அடித்து இருந்தார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 17 ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.